நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 05 வியாழக்கிழமை (17.04.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 120

SATS TECH

யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

**சம்பா 70/=, நாட்டரிசி 65 /=, சிவப்பு அரிசி 65 /=, வெள்ளைப் பச்சையரிசி 55 /=**

# அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை!

# மீறுவோர் மீது கடும் நடவடிக்கை

## அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்து வரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று நள்ளிரவு முதல் அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப் புதிய விலை நடைமுறையை வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே...**

சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?

சிம்மம்



## மதவாச்சி ஊடான போக்குவரத்துக்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதிக்குக் கடிதம்

(வவுனியா)

மதவாச்சி ஊடான பாதுகாப்பான பயணங்களுக்கு வழி செய்யுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோதராதலிங்கம், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிய கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மன்னாரில் வசிக்கும் மக்களும், மன்னாருக்கு மதவாச்சி ஊடாகவும் வவுனியாவிலிருந்தும் வருகைதரும் ஏனைய பிரதேச மக்களும் கடந்த சில நாட்களாக புதுவிதமான பாதுகாப்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## மேதின நிகழ்வுகளை ஐ.தே.க. நடத்தாது

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி உலக தொழிலாளர் தினமாகும் .இதனை முன்னிட்டு உலக நாடுகள் பலவற்றில் விசேட நிகழ்வுகள் இடம்பெறுவது வழமை. இத்தினத்தில் இலங்கையிலும் தொழிலாளர் சார் நிகழ்வுகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இதல் அரசியல் கட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையில் இம்முறை எதிர் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மேதினத்தை ஒட்டி குருநாகலில் நடத்துவதற்று ஏற்பாடு செய்திருந்த மேதின (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் குடும்பஸ்தர்கள் இருவர் கொழும்பில் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ் குடும்பஸ்தர்கள் இருவர் வெள்ளைவானில் வந்த ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகக் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனையிலுள்ள வியாகுல மாதா ஆலயத்திற்கு முன்பாகவே இவர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் சூடுபிடிக்கும் தேர்தல் பிரசாரம்

எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதி கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெறும் என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேட்சைகளும் மக்கள் மத்தியில் தடல்புடலான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கிழக்கிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றவர்களில் பெரும்பன்மையாக தமிழ் மக்களே காணப்படுவதாகவும் கிழக்கு மாகாணத்துக்கான குடிசன மதிப்பீட்டு அறிக்கை தெரிவித்துள்ளது. (ச)

## முகமாலையில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

வடக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு முன்னரங்குகள் மற்றும் பதுங்கு குழிகள் என்பவற்றின் மீது நேற்று முன்தினமும் நேற்றும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக விமானப்படை பேச்சாளர் அன்ரு விஜேசூரிய தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் கூறுகையில்,

முகமாலையில் உள்ள பாதுகாப்புப் படையினரின் முன்னரங்குகளுக்கு அருகாமையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குத் தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் மாற்றம்?

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழுவினைரையும் சுதந்திரக் கட்சிக்குள் இணைத்து அமைச்சரவை மாற்றமொன்றை ஏற்படுத்தி அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ திட்டம்தீட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்பொழுது நாட்டில் காணப்படும் பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரியங்காவைச் சந்தித்ததால் பாவங்கள் கழுவப்பட்டு விட்டன

### நளினி தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் மகள் பிரியங்கா, தன்னை வந்து சந்தித்தன் மூலம் தனது பாவங்கள் கழுவப்பட்டு விட்டதாகக் கூறியுள்ளார் நளினி.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நளினியை ,பிரியங்கா வேலூர் சிறையில் சென்று சந்தித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

CENTRAL COLLEGE JAFFNA

‘வடக்கின் பெரும் போர் - 2008’

யாழ்.மத்திய கல்லூரி VS சென்.ஜோன்ஸ் கல்லூரி

யாழ்.மத்திய கல்லூரி மைதானம்
ஏப்ரல் 17,18 மற்றும் 19 ஆம் திகதி

உத்தியோகபூர்வ ஊடக அனுசரணை:-
வலம்புரி

ST JOHN'S COLLEGE JAFFNA - CEYLON

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வலி. வடக்கு பிரதேச செயலக தடகள போட்டி இறுதி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட வட்டு. இந்து வாலிபர் சங்க அணித் தலைவிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும், வலைபந்தாட்டத்தில் சம்பியனான வட்டு. இந்து வாலிபர் சங்க அணிக்கான கிண்ணத்தை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி சி.துரைசிங்கம் வழங்குவதை முதல் இரு படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்டோரை மற்றைய படத்திலும் காணலாம். (படங்கள்: வட்டு.நிருபர்)

## வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு 2005 ஆம் ஆண்டு பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் அமைச்சு 2005 ஆம் ஆண்டு பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பித்த அலுவலர்களுக்கு ஏற்கனவே கடந்த மாசி மாதம் 24 ஆம் திகதி இடம்பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-2)

## பயிற்சி நெறி பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

வைத்திய பதிவு வைத்திய அதிகாரிகளுக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயிற்சி நெறி தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது.

பயிற்சிநெறிக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச)

## செயலமர்வு

(யாழ்ப்பர்ணம்)

நிகோட் செயற்திட்டத்தின் கீழ் தீவகக் கல்வி வலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆரம்ப பிரிவில் ஆங்கிலம் கற்பிப்பதற்கான 10 நாள் அடிப்படை பயிற்சி வழங்கல் செயலமர்வு 19,20 ஆகிய இரு தினங்களும் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களும் இணைப்புச் செய்யப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்களும் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இப்பயிற்சி வகுப்பு வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெறுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ச)

## இலங்கை வங்கிக்கு நாளை விடுமுறை

(யாழ்ப்பாணம்)

விசேட வங்கி விடுமுறையையிட்டு இலங்கை வங்கியின் கிளைகள் அனைத்தும் நாளை வாடிக்கையாளர் சேவைகளுக்காக மூடப்பட்டிருக்குமென வங்கியின் வடவலய செயற்பாட்டு முகாமையாளர் அறிவித்துள்ளார். (ச)

## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வளர்ப்பு பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கான பதிவுகளை மகாத்மா சனசமூக நிலையத் தலைவரிடம் மேற்கொள்ளுமாறு சுதுமலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (ச-6)

* * *

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திர சிகிச்சையும், கருத்தடை ஊசி ஏற்றலும் இன்று நாவாந்துறை சென் நீக்கலஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சிகிச்சையும், 8 மாதத்திற்கு மேற்பட்ட பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை ஊசி ஏற்றலும் நடைபெற உள்ளது. பொது மக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச-2)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நுண்கலைத்துறையின் கலைவட்டம் நடாத்தி வரும் கருத்தரங்குத் தொடரில் 'யாழ்ப்பாணத்து மடக்கட்டடக்கலை' எனும் தலைப்பில் குமுதா சோமசுந்தரக் குருக்களின் கருத்தரங்கு நாளை பிற்பகல் 2 மணியளவில் புதிய கலைப்பீட கட்டடத்தொகுதியில் இடம்பெற உள்ளது. (ச)

## அறிவித்தல்

(குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 16ஆம் பிரிவின் படியானது)

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வழக்கு இல.நானாவிதம் /105/08

1. திருமதி வசுந்தரா சடாட்சரன் கதிர்காமர்,
லக்சுமி வாசா,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
2. சிவசிதம்பரப்பிள்ளை
சிவசண்முகப்பிள்ளை,
வத்தானை வளவு,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
3. திருமதி கிறேஸ் ரட்ணதேவி ஜெயரட்ணம்,
சின்னப்பீர லேன்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

வழக்காளிகள்

எதிர்

1. அதி.வண.டானியல் செல்வரத்தினம்
தியாகராஜா,
பேராயர் இல்லம்,
வட்டுக்கோட்டை.
அத்துடன்-
36 5/2 சின்சபா றோட்டு,
கொழும்பு-6.
2. ஆசீர்வாதம் அருள்யோசப்,
ஆதீனக் காரியாலயம்,
தென்னிந்தியத் திருச்சபை யாழ் ஆதீனம்,
வட்டுக்கோட்டை.
3. திருமதி ஷிரானி மில்ஸ்
அதிபர்,
மிஷன் இல்லம்,
உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்.
4. திரு.C.Dசின்னக்கோன்
3,E புளொக்,
பம்பலப்பிட்டி பிளாட்ஸ்,
கொழும்பு-04.
5. வண.செல்வி டெய்சி ஆசீர்வாதம்
இல. 17, பிரான்சிஸ் றோட்டு,
கொழும்பு-6.
6. வண. G. நடராஜா,
ஆசிரியர் தங்குமிடம்,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.
7. கலாநிதி செல்வி C.V. செல்லையா,
44 /1, E.S. பெர்னான்டோ மாவத்தை,
கொழும்பு-6.
8. Dr.V.R. டேவிட்
மே /பா, திரு.பாலகிருஷ்ணன்,
லோட்டன் றோட், மானிப்பாய்.
9. Dr.திருமதி தயா தியாகராஜா,
பேராயர் இல்லம்,
வட்டுக்கோட்டை.
அத்துடன்-
36-5 /2, சின்சபா றோட்டு,
கொழும்பு-6.
10. திருமதி E.A. ஜெயராஜன்,
ஆசிரியர் தங்குமிடம்,
யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.
11. வண.ஐ.இராஜ்குமார்,
ஆதீனக்காரியால்யம்,
தென்னிந்தியத்திருச்சபை,
வட்டுக்கோட்டை.

எதிராளிகள்

இம்மன்றில் மேற்படி வழக்காளிகளினால், மேலே கூறப்பட்டுள்ள எதிராளிகளுக்கு எதிராக, உடுவில் மகளிர் கல்லூரி நிருவாகம் தொடர்பாக வழக்குத்தொடரப்பட்டமைக்கு அமைவாக, இவ்வழக்கு இம்மன்றில் கூப்பிடப்பட்டு 1ம்,2ம்,11ம் எதிராளிகளுக்கு எதிராக பின்வருமாறு கட்டாணையையும் பிறப்பித்துள்ளது என்பதை அறியத்தருகிறேன். ஆதலால் இதில் அக்கறையுள்ள எவராவது இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் இடைபுகுனராக, நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணி மூலமாகவோ இணைந்து கொள்ளலாம் என்பதையும் இத்தால் அறியத்தருகிறேன்.

**மேற்சொல்லப்பட்ட 1ம்,2ம்,11ம் எதிராளிகளுக்கு எதிராக,**

19.03.2008 திகதியன்று இவ்வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி அவர்கள் முன்னிலையில் வழக்காளிகளின் சட்டத்தரணிகளின் பிரசன்னத்துடன் வந்தபோது, மேற்படி வழக்காளின் பிராது,சத்தியக்கூற்று, ஆவணங்கள் ஆகியவற்றை மன்று நன்கு பரிசீலித்து, இவ்வழக்கானது, இந்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட உடுவில் மகளிர் கல்லூரியின் கல்வி நடவடிக்கை சம்பந்தமான ஒரு பிணக்கு என்பதாலும், மேலும், இக்கல்லூரியில் பல மாணவிகள் கல்வி பயின்று வருவதாலும், மேலும் குறித்த மாணவிகளின் கல்வியானது சீர்குலையக்கூடாது என்பதற்காகவும், மேலும் கல்லூரியில் முன்னிருந்த நிலை பேணப்படவேண்டும் என்று, வழக்காளிகள் பிராதிற் கோரியுள்ளமைக்கு அமையவும், வழக்காளிகள் நிவாரணங்களைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் என்பதையிட்டு மன்று திருப்தியடைந்ததன் பெயரில், இவ்வழக்கின் '3ம் எதிராளிக்கு எதிராக, 1ம், 2ம்,11ம் எதிராளிகளும், தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீன நிருவாக சபையின் ஏனைய உறுப்பினர்களும், எதுவித ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதையும் தடை செய்து' கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

மேலும் இக்கட்டாணையை மீறிச் செயற்படும் பட்சத்தில் நீதிமன்றக்கட்டளையை அவமதித்த குற்றத்திற்கு ஆளாவார்கள் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கட்டாணையானது இன்றிலிருந்து 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும் என்றும், அத்துடன் இவ்வழக்கு இம்மன்றில் 25-04-2008ம் திகதி முற்பகல் 9.00 மணிக்குக் கூப்பிடப்படும் எனவும் அறியத்தருகிறேன்.

2008 ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் திகதி.

மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ம.செல்வரத்தினம்
பதிவாளர்
மாவட்ட / நீதவான் நீதிமன்றம்
மல்லாகம்

(1099)




'வடக்கின் பெரும் போர்'

சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்

ருவின்ஸ் ஸ்ரார் றெஸ்ரோறன்ற்

விருந்துபசாரங்களுக்கான சகல உணவு வகைகளும் ஓடருக்குச் செய்து கொடுப்பதுடன் பரிசாரகரின் சேவையும் வழங்கப்படும்.

தொடர்பு:- இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7014
077 9227745

## இன்று ஒரு தகவல்

# மாலுமியற்ற மரக்கலம்!

"கோபக்காரன், மாலுமி இல்லாத மரக்கலம் போன்றவன்" என்றார் நபிகள் நாயகம். கொந்தளிக்கிற கடலிலே கொடுமையான அலைகளின் உச்சியிலே அல்லல்படுகின்ற மரக்கலத்தை விட மோசமானது கோபக்காரனின் நிலைமை என்பது அவர் கருத்து.

''அதுமாதிரி இது '' என்று கூட அவர் சொல்ல வில்லை. அதைவிட மோசமானது என்று சொன்னார். ஏன் தெரியுமா? ஒரு கப்பல் கடலிலே தடுமாறினால் அதைச் சரிப் படுத்த மாலுமி இருக்கிறார்.

அவர் தன்னுடைய சாமர்த்தியத் தினால் அதைக் கட்டுப்படுத்திச் சரியான வழிக்குக் கொண்டுவந்து விடுவார். ஆனால் ஒரு கோபக்காரனின் நிலைமை அப்படி இல்லை.

மனித மனம் ஒரு மரக்கலம். அறிவு, அதிலே இருக்கிற மாலுமி! மாலுமி மரக்கலத்தைச் செலுத்துகிறான். அவனுக்கு கட்டுப்பட்டு அது ஓடுகிறது. ஆனால் கோபக்காரன் என்ற மனிதனிடத்திலே அறிவு என்கிற மாலுமி சரியாக வேலை செய்யமாட்டார். ஏனென்றால், கோபம் அந்த மாலுமியின் கண்களை அழித்துவிடும். காதுகளைக் கேளாது செய்துவிடும். கண்ணையும் காதையும் மூடி விட்டு கப்பலை ஓட்டு என்றால் எப்படி ஓட்டுவது? ஆகவே, கோபக்காரன் என்பவன் மாலுமி இல்லாத மரக்கலம்.

இடி-மின்னல் -புயல் நடுவே சிக்கித் தவிக்கும் கப்பலைப் போல இவனும் சிக்கித் தவிக்கிறான். பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? '',உனக்குக் கெடுதல் செய்தவனுக்கு நீ நன்மையையே செய்! எவருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தாதே! பரம எதிரிக்கும் நீ நன்மை செய்ய ஆரம்பித்தால் உன்னுடைய தூய நிலையைப் பார்த்துவிட்டு அவனும் உனக்கு நெருக்கமான நண்பன் ஆகிவிடுவான்'' இது தான் பெரியவர்கள் நமக்குச் சொல்லியிருப்பது.

புனித குரான் என்ன சொல்கிறது? "தீமையை, நன்மையைக் கொண்டே நீர் தடுத்துக் கொள்ளும்'' திருவள்ளுவர் என்ன சொல்கிறார்?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

அது மாத்திரமல்ல; "சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்றும் சொல்லியிருக்கிறார்.

ஓர் ஊரிலே ஒரு செல்வந்தர் இருந்தார். அவரிடம் நிறைய ஆடுகள் இருந்தன. அவற்றை மேய்ப்பதற்கு ஒரு சிறுவன் இருந்தான். செல்வந்தர் ஒருநாள் ஆடு மேய்க்கிற சிறுவனைக் கூப்பிட்டார்.

'' நீ நேராகப் போய் ஓர் ஆட்டிலே உள்ள மிகவும் நல்ல பகுதி எதுவோ அதை எடுத்து வா!" என்றார்.

இவன் போனான். ஓர் ஆட்டின் உடம்பிலே இருந்த நாக்கு, இருதயம் இரண்டையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான். அதை அவர் வாங்கிக் கொண்டார். அதன்பின் மறுபடியும் அவனை நோக்கி, '' இப்பொழுது நீ போய் இன்னோர் ஆட்டிலே உள்ள மிகவும் கெட்ட பகுதி எதுவோ அதை எடுத்துக்கொண்டு வா!'' என்றார். இவன் போய் மறுபடியும் கொண்டு வந்தது ஒரு நாக்கு, ஓர் இதயம் "என்ன இது" மறுபடியும் அதையே கொண்டு வந்திருக்கிறாய்? என்றார் செல்வந்தர்.

இவன் சொன்னான் - '' ஐயா! ஓர் உடம்பிலே இருக்கிற மிக நல்ல பொருளும் இது தான். மிக்க கெட்ட பொருளும் இதுதான்'' இளம் வயதிலே இப்படிச் சொன்னவர் தான் பேரறிஞர் லுக்மானுல் ஹக்கீம் அவர்கள். கோபப்படாமல் இருந்தால் இவை இரண்டும் நன்றாகவே வேலைசெய்யும். கோபப்பட்டால் இவை இரண்டும் மோச மாக வேலைசெய்யும். எனவே, வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும் என்று நினைக்கிறவர்கள் முதலில் கோபத்தை விரட்ட வேண்டும்.

ஒருவர் அவசரமாக டாக்டரைத் தேடி ஓடினார். '' டாக்டர்! இப்பொழுது எனக்குக் கடுமையான கோப வெறி. எனக்குக் கண், மண் ஒன்றும் புரியவில்லை. உடனடியாக அதைக் கட்டுப்படுத்த வேண்டும். உடனே இதற்கு ஏதாவது ஒரு மாத்திரை கொடுங்கள்" என்றார்.

அந்த டாக்டரும் ஒரு மாத்திரை கொடுத்து "... இதை உடனே போடுங்கள்... நான் தண்ணீர் கொண்டு வருகிறேன்..." என்று கூறிவிட்டு உள்ளே போனார்.

டாக்டர் தண்ணீருடன் திரும்பி வந்தபோது இவர் சொன்னார். " டாக்டர்...! நீங்கள் கொடுத்த மாத்திரை ரொம்பப் பெரிதாக இருந்தது! இருந்தாலும் ரொம்பக் கஷ்டப்பட்டு அதை விழுங்கி விட்டேன்"

டாக்டர் சந்தேகத்துடன் மேசையைப் பார்த்தார். அவர் கொடுத்த மாத்திரை மேசை மேல் இருந்தது. அங்கே இருந்த 'பேப்பர் வெயிட்'டைக் காணவில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்வேறு நெருக்கடிகள், செலவினங்கள் மத்தியிலும் மக்களுக்கு சீரான சேவையை வழங்குகின்றோம்

## ரெலிக்கொம் வடகிழக்கு பொதுமுகாமையாளர் ஏ.கிருபாகரன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் தொலைத் தொடர்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் பரா மரிப்பதற்கும் பல மில்லியன் ரூபா நிதியை மேலதிகமாக செலவு செய்ய வேண்டிய நிலையிலிருந்தபோதிலும் ஏனைய மாவட்டங்களைப் போன்று சமத்துவமான நிலையில் யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களுக்கான சேவைகள், வசதிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு ''ஶ்ரீலங்கா ரெலிக்கொம்'' நிறு வனத்தின் வடகிழக்கு பொது முகாமையாளர் ஏ.கிருபாகரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்துக்கு தொலைத் தொடர்பு கருவி சாதனங்களை எடுத்துச் செல்வதற்கு விமானம் மூலமாயின் ஒவ்வொரு கிலோவுக்கும் 250 ரூபா வீதம், பயணிகள் கப்பல் மூலமாயின் ஒவ்வொரு 25 கிலோவுக்கும் ஒரு பயணிக்கான கட்டணம் என்ற வகையில் 3500 ரூபா வீதமும், சரக்குக் கப்பல் மூலமாயின் ஒரு கனமீற்றர் 75 டொலர் என்ற வகையிலும் செலவு செய்ய வேண்டியுள்ளது.

ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்திற்கான தொலைத் தொடர்பு வசதி களை மேம்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் நிறுவனம் பல்வேறு நெருக்கடிகளையும் மேலதிக செலவினங்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. என்றாலும் யாழ். மாவட் டத்தில் ஏனைய மாவட்டங்களைப் போன்று சமத்துவமான முறையில் தொலைத்தொடர்பு வசதிகள், சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் சிற்றிலிங் சீ.டீ.எம்.ஏ. தொலைபேசி வசதியை வலுவுள்ளதாகவும், முழுமையாகவும் பயன்படுத்துவதற்கு வசதி யாக மேலும் மூன்று கோபுரங்கள் நிறுவப்பட வுள்ளன. சாவகச்சேரி, சித்தன்கேணி, புங்குடுதீவு ஆகிய இடங்களில் புதிய கோபுரங்கள் நிறுவப்படவுள்ளன.

யர்ழ்.மாவட்டத்தில் தற்போது உள்ள ஏற் பாடுகளின்படி 12ஆயிரம் சீ.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்களை வழங்க முடியும். இந்த வகையில் 6ஆயிரம் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் 2000 இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. கட்டம் கட்டமாக மிக விரை வில் சீ.டீ.எம்.ஏ. கோரி விண்ணப்பித்த அனைவருக்கும் இணைப்புக்கள் வழங் கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு மிக விரைவில் எடுத்துச் செல்லப்படவுள்ள 2 ஆயிரம் சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளில் 700 பக்ஸ் இணைப்புக்களும் எடுத்துச்செல்லப்படவுள்ளன. சுன்னாகத்தில் மேற்கொள்ளப்படும் நிலக்கீழ் கேபிள் இணைப்பு வேலைகள் கட்டம் கட்டமாக நிறைவு செய்யப்பட்டு 2500 இணைப்புக்கள் வரை வழங்கப்படும்.

இந்த வருட நடுப் பகுதிக்கு முன்னர் முழுமையாக தொலை பேசி இணைப்புக்கள் வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் ஒப்பந்த வேலைகள் நிறைவு பெறுவதில் தான் இது தங்கியுள்ளது.

ஒப்பந்த வேலை கள் முடிவடையுமானால் எதிர்பார்த்த இலக்கின் பிரகாரம் இணைப்புக் கள் வழங்கப் படும் எனவும்,

யாழ்ப்பாணத்திற்கு தொலைத் தொடர்பு கருவி சாதனங்களை எடுத்து வருவதில் ஏற்படும் தாமதங்கள், சிரமங்கள் தான் எதிர்பார்த்த கால இடைவெளியில் சில செயற்திட்டங்களை நிறைவுசெய்ய முடியாமல் போவதற்கு காரணங்களாகி வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார். (ஓ-5)

# யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது

## அமைச்சர் டிலான் பெரேரா

(கொழும்பு)

யாழ்பாணத்தில் புதிய சிறைச் சாலையொன்று அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நீதி மற்றும் நீதிமன்ற மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச் சாலை ஒன்று அமைப்பதற்குத் தேவையான காணி ஒன்றும் ஒதுக் கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் நீதி மன்ற மறுசீரமைப்பு அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டார்.

அங்கு தற்போதுள்ள சிறைச் சாலை எந்தவித வசதிகளும் இல்லாத நிலையில் உள்ளதாகவும் இதன் காரணமாக சிறைக்கைதிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாகவும் இதனைத் தவிர்க்கும் முகமாக புதிய சிறைச் சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலையை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப் படும் எனவும் மேலும் கூறினார். (ஓ-7)

## இராசிபலன்

17.04.2008
(சித்திரை 5, வியாழக்கிழமை)
பூரம் முற்பகல் 11.12 மணிவரை
துவாதசி பிற்பகல் 01.14 மணிவரை
இராகுகாலம் 01.33-03.03மணிவரை
சுபநேரம்-07.33-09.03 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | வியாபாரவிருத்தி, சிறுவியாதி, சொத்துப் பிணக்கு, தனவிரயம். |
| இடபம் | கல்வியில் ஆர்வம், சுபசெலவு, தாய் வழி உறவு, மனச்சஞ்சலம். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, போசனசுகம், சுபநிகழ்வு. |
| கடகம | கடினவார்த்தை, வேலைச்சுமை, மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | ஜனவசியம், பெரியோர் சந்திப்பு, தேகநலன், தெய்வ்சிந்தை. |
| கன்னி | அமைதிக்குறைவு, சுபசெலவு, கௌரவக்குறைவு, முயற்சிதாமதம். |
| துலாம் | தனலாபம், காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, நண்பர்சந்திப்பு. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், அதிகாரம், கடின உழைப்பு, போசனசுகம். |
| தனுசு | புதியதிட்டமிடல், செய்தொழில்விருத்தி, வீண்பயம், முயற்சிதாமதம். |
| மகரம் | வாகனபயம், எதிரிகள் தொல்லை, காரிய தடங்கல், பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | நல்ல வரவேற்பு, குடும்ப மகிழ்ச்சி, முயற்சிபலிதம், திடீர் பயணம். |
| மீனம் | நல்லசம்பவம், முயற்சிகைகூடும், தேகநலன், பாராட்டு. |

வளவன்


பாலகணபதி துணை
அல்வாய் சாமணந்தறை
ஆலடிப்பிள்ளையார் கோவில் மஹோற்சவம்
7ஆம் நாள் சப்பறத்திருவிழா
(17.04.2008)

முதுகாடும் திருக்கோவில் அருகான மூர்த்தியே
முதுநீர் கரையாடும் மகிலூரா - முதுமரம்
தரும்நிழல் மேவும் தலங்காணும் தந்திமுகனே
தருவாயே தகயாவும் சரணந்தாள்

பனைவளமோங்கி கல்விவளமோங்கி அல்வையூர் ஓங்கும்
புகழ் மிகும் சாமணந்தறைப் புலமோங்க
வினைதீர்க்கும் விக்னவிநாயகன் அருளோங்கும்
ஆலோங்கி நிழலாக ஆங்கமர்ந்து
தின மெம்மை காத்து நின்று சீரோங்க
சிறப்போங்க நலந்தந்து வழி காட்டி
மனநிறைவோங்க வாழ்வளிப்பாய் பாலகணபதியே
மன்னும் அடியார்க்கு மகிழ்வோங்கவே

(1052) அல்வாயூர் சி.சிவநேசன்



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் வைத்திய சாலை உத்தியோகத்தர்களின் இரத்ததான நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உத்தியோகத்தரொருவர் இரத்த தானம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: பரு.நிருபர்)

# கரவெட்டி பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைவாக கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் தேசிய இலக்கிய கலைப் பெருவிழா போட்டி முடிவுகள் பிரதேச செயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டி முடிவுகள் வருமாறு,

**கட்டுரை (கனிஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்:-சி.ஷகிர்த்தியா- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், 2ஆம் இடம்:- ஜெ. மதிசாந்தினி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 3ஆம் இடம்:- லோ.தேனுசா-விக்னேஸ்வராக் கல்லூரி.

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்:- இ.தயானி-ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அறநெறி பாடசாலை,2ஆம் இடம்:- கா.துவாரகா- விக்னேஸ்வராக் கல்லூரி, 3ஆம் இடம்:- ந.ரவிச்சந்திரிக்கா- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், 3ஆம் இடம்:- பு.ஜீவனா-விக்னேஸ்வராக் கல்லூரி, 3ஆம் இடம்:- ந.கிசோனி -விக்னேஸ்வராக் கல்லூரி.

**கவிதை-(கனிஷ்டபிரிவு)**

1ஆம் இடம்:- கோ.கோசலா-நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், 2ஆம்இடம்:- கி.அனுராதா- கரணவாய் பொன்னாலை வித்தியாலயம், 3ஆம் இடம்:- செ.சஞ்சிகா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**சிறுகதை - (கனிஷ்டபிரிவு)**

1ஆம்இடம்:- ஆ.றாஜி-இமையாணன் அ.த.க.வித்தியாலயம், 2ஆம் இடம்:-ஜெ. தசாந்தினி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம்:- இ.அபிலாசினி-இமையாணன் அ.த.க. வித்தியாலயம், 2ஆம் இடம்-ந.ஜெயப் பிரியா- இமையாணன் அ.த.க.வித்தியாலயம், 3ஆம் இடம்- கி.கீர்த்தனா- இமையாணன் அ.த.க. வித்தியாலயம்.

**சிறுகதை - (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்:- ர.விஜிதா - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்:- க.பிரியந்தினி- விக்னேஸ்வராக் கல்லூரி, 3ஆம் இடம்:- இ.றம்சிக்கா-விக்னேஸ்வராக் கல்லூரி.

**சிறுகதை - (திறந்த பிரிவு)**

1ஆம் இடம்:- திருமதி நா. அனந்தராணி - நெல்லியடி, 2ஆம் இடம்:- ந.ஆதவன்- அல்வாய், 3ஆம் இடம்:- க.பாலன் - இமையாணன்.

**கவிதை சிரேஷ்டபிரிவு**

1ஆம் இடம்:- மு.நீதா - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், 2ஆம் இடம்:- சி.மேரி றேக்மி -விக்னேஸ்வராக் கல்லூரி, 2ஆம் இடம்:- பு.ஜீவனா- விக்னேஸ்வராக் கல்லூரி, 3ஆம் இடம்:- க.நிதர்சன்- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**கவிதை (திறந்த பிரிவு)**

1ஆம் இடம்:-க.பாலன்-இமையாணன், 2ஆம் இடம் :-சி.செகராசசிங்கம்-அல்வாய் தெற்கு, 2ஆம் இடம்:- சு.பிரபாவதி -கரணவாய் மத்தி, 3ஆம் இடம்:- க.முத்துவேலு - இமையாணன்.

**ஆங்கில கவிதை -(திறந்தபிரிவு)**

1ஆம் இடம்:- க.பகீரதி-துன்னாலை

**பாடல்.எழுதும் போட்டி-(திறந்த பிரிவு)**

1ஆம் இடம்:-திருமதி நா. அனந்தராணி- நெல்லியடி, 1ஆம் இடம்:- திருமதி க.பிரபாவதி-கரணவாய் மத்தி, 1ஆம் இடம்:- க.முத்துவேலு -இமையாணன், 2ஆம் இடம்:- க.பாலன் -இமையாணன், 3ஆம் இடம்:-திருமதி பத்தினிப்பிள்ளை-துன்னாலை மத்தி.

**சிறுகதை - (கனிஷ்டபிரிவு)**

1ஆம் இடம்:- ஆ.றாஜி- இமையாணன் அ.த.க.வித்தியாலயம், 2ஆம் இடம்:- ஜெ.தசாந்தினி:- உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம்:-இ.அபிலாசினி:- இமையாணன் அ.த.க.வித்தியாலயம், 2ஆம் இடம்:- ந. ஜெயப்பிரியா- இமையாணன் அ.த.க.வித்தியால யம்,3ஆம் இடம்:- கி. கீர்த்தனா- இமையாணன் அ.த.க.வித்தியாலயம்.

**சிறுகதை (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம்:- ர.விஜிதா- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,2ஆம் இடம்:- க.பிரியந்தினி - விக்னேஸ்வராக் கல்லூரி, 3ஆம் இடம்:- இ.றம்சிக்கா- விக்னேஸ்வராக் கல்லூரி.

**சிறுகதை -(திறந்த பிரிவு)**

1ஆம் இடம்:-திருமதி நா.அனந்தராணி- நெல்லியடி, 2ஆம் இடம்:-ந.ஆதவன் - அல்வாய், 3ஆம் இடம்:- க.பாலன் -இமையாணன். (ஓ)


## நூல் அரங்கேற்ற விழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்து நகுலேஸ்வர வட இலங்கை வலய மேழயூர் சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசினால் அருளிச்செய்யப்பட்ட "உவமையிலா கலைஞானம்" நூல் அரங்கேற்ற விழா 19ஆம்திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8.30மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் அர்ச்சனை வழிபாடு, ஆதீன குருமுதல்வர் சிலைக்கு மாலை சூட்டுதல், கோயில் பூசை, திருமுறை குருதோத்திரம், வேதபாராயணம் ஓதுதல் என்பன நடைபெற்று தொடர்ந்து காலை 9 மணிக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவவினால் மங்கள விளக்கேற்றும் நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் மற்றும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் போசகர் சித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் இ.செல்லத்துரை ஆகியோர் ஆசியுரை வழங்கலும் இடம்பெறும்.

இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன், யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகானந்தன், பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி அதிபர் தா.காங்கேசபிள்ளை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அ..ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆகியோர் கலந்து உரை வழங்கவுள்ளனர். நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக(வாழ்நாள் பேராசிரியர்) பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் வழங்கவுள்ளார். (ஓ)




## யோகாசன கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிவலிங்க யோக்கேந்திரா நிலையத்தினால் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு வட்டுக்கோட்டை, சிந்துபுரம் காந்திஜி சனசமூக நிலையத்தில் யோககேந்திரா நிலையச் செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் யோகாசனக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கை "யோகாசனமும் வாழ்வும்" எனும் தலைப்பில் யோககேந்திரா நிலையத் தலைவர் நா.நவராஜ் நிகழ்த்தவுள்ளார்.

யோகக் கலை பயில விரும்புவோர், தற்போது பயின்று கொண்டிருப்போர் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும், யோகக் கலையைப் பயில விரும்புவோர் வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளலாமெனவும் சிவலிங்க யோககேந்திரா நிலைய இயக்குநர் க.நிஜலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-7)

## மரக்கறி விதைகளுக்கான தட்டுப்பாட்டை நீக்க கமநலத் திணைக்களம் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் மரக்கறி விதைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தனியார் விவசாயிகளிடம் கையிருப்பில் உள்ள விதைகளை கொள்வனவு செய்வதுடன் தென்னிலங்கையில் இருந்து மரக்கறி விதைகளை எடுத்துவந்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு கமநல சேவைகள் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.


யாழ். மாவட்டத்தில் அண்மையில் பெய்த தொடர் மழையினால் மரக்கறிப் பயிரினங்கள் பெருமளவில் சேதமடைந்ததுடன் விதை இணங்களும் அழிவடைந்துள்ளன. இந்த வகையில் திருநெல்வேலியில் செயற்பட்டு வந்த விதை உற்பத்தி நிலையத்திலும் பாதிப்பு ஏற்பட்டதை அடுத்து மரக்கறி விதைகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தக்காளி, பாகல், புடோல், கத்தரி, பயிற்றை, அவரை, நிலக்கடலை, புசிற்றோவா, பயறு உள்ளிட்ட மரக்கறி விதைகள் பொருத்தமான அளவில் விவசாயிகளுக்கு கிடைக்காமையினால் தொடர்ந்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையை தற்காலிகமாக நிவர்த்தி செய்வதற்கு வசதியாக உள்ளூர்களில் தனித்தனி விவசாயிகள் மேலதிகமாக வைத்திருக்கும் விதை இனங்கள் நியாயமான விலையில் கமநலசேவைத் திணைக்களத்தினால் கமநல சேவை நிலையங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்படுகின்றன.

அத்துடன் தரமான நவீன விதை இனங்கள், கன்னொறுவ விளை உற்பத்தி ஆய்வு நிலையத்தில் இருந்தும் விதைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-5)



சிவபூமி முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ கல்கி பகவானின் ஜென்மதின பாதபூஜை நிகழ்வில் பக்தர்கள் மலர்பூஜை செய்வதை முதலாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாய தாக்ஷி ஸமேத ஸ்ரீ காயாரோஹண ஸ்வாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 10மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 19 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருமஞ்ச உற்சவமும் 30 ஆம் திகதி புதன்கிழமை மாலை கைலாசவாகனமும், 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை சந்தான கோபாலர் உற்சவமும், மாலை சப்பறமும், 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தியாகராஜ மூர்த்திகள் சகிதம் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி பஞ்ச இரதோற்சவமும், 5ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஆனந்தநடராஜ மூர்த்தி திருவுலா நடனக் காட்சியும், தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும்.

தினமும் காலை 10மணியளவிலும், மாலை 4.30மணியளவிலும், தேர்த்திருவிழாவன்று காலை 7மணியளவிலும் தீர்த்த திருவிழாவன்று காலை 8 மணியளவிலும் வசந்த மண்டப பூஜை நடைபெறும். (ஓ-6)

## மணவாளக் கோல உற்சவம்

(மருதங்கேணி)

தென்புலோலி அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மணவாள கோல உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகும்.

உற்சவத்தில் சுவாமிக்கு 1008 சங்குகளால் அபிஷேகமும் பகல் 12 மணியளவில் விஷேசபூசைகளும் தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி வீதி உலா வருவார். அத்துடன் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ. ஜெபபாலசுந்தரம் குருக்களினால் நடாத்தப்படும். (ஓ-35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 20ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் "கீதை காட்டும் வழி" எனும் விடயம் பற்றி வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் சிவநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

+++

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதிவெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் "பெரியபுராண" (தொடர்) எனும் விடயம் பற்றி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

+++

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவர்ன் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 19ஆம் திகதி சனிக்கழமை போயா ஆன்மீக நிகழ்வுகள் அதிகாலை 5.15க்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும்.

அன்று ஓம்காரம், வேதபாராயணம், காயத்திரிஜெபம், திருநீற்றுப் பதிகம், கோளாறு பதிகம், பஜனை, சொற்பொழிவு ஆகியன இடம் பெறும். (ஓ)

## வீதி திருத்தி அமைக்க கோரிக்கை

(மருதங்கேணி)

கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி குடத்தனை பொற்பதி வீதி திருத்தி அமைக்கப்பட வேண்டுமென அப்பகுதி மக்கள் யாழ் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை அம்பனில் உள்ள புது வீதியும் திருத்தப்படல் வேண்டுமென அப்பகுதி மக்களினால் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-35)

# ஈராக் குண்டுவெடிப்புகளில் 70ற்கும் அதிகமானோர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களில் எழுபதுக்கும் அதிக மானவர்கள் கொல்லப்பட்டதாக, அந்நாட்டு பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பக்தாத்துக்கு வடக்கே இருக் கும் பக்‌ஷுபா நகரில் இருக்கும் நீதி மன்றத்திற்கு அருகே குண்டு ஒன்று வெடித்ததில் 53 பேர் கொல்லப் பட்டதாகவும் தலைநகருக்கு மேற்கே இருக்கும் ரமாடியில் பொலிஸார் சாப்பிட்டுக் கொண் டிருந்த சிற்றுண்டிச்சாலையில் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய தாக்குத லின் போது 13 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரி விக்கப்படுகின்றது. பக்தாத்தில் நடந்த குண்டு வெடிப்பிலும் ஒருவர் கொல்லப்பட்டார். இந்தத் தாக்குதல்களை நடத்தியது யார் என்பது தெளிவாகத்தெரியவில்லை. ஆனால் அல் கொய்தாவால் ஊக்கப்படுத்தப்பட்ட சன்னி இஸ் லாமிய குழுக்கள் மீது சந்தேக நிழல் பதிவ தாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-5)


ஈராக் தாக்குதலில் காயமடைந்த குழந்தை ஒன்று

# தானியங்களின் விலையேற்றத்தை தாக்குப்பிடிக்க உணவு உற்பத்தி முறையில் மாற்றங்கள் தேவை

## என்கிறது ஐ.நா. மன்றம்

(ஜெனிவா)

உலக அளவில் உணவுதானியங்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் போக்குக் காரணமாக பல இலட்சக்கணக்கான மக்கள் ஏழ்மையின் பிடியில் சிக்கும் ஆபத்து அதி கரித்துள்ள பின்னணியில், உணவுப் பண்டங் களின் உற்பத்திமுறையில் மிகப் பெரிய மாற் றங்கள் செய்யப்பட வேண்டும் என்று ஐ.நா மன்றம் வேண்டுகோள் விடுத் திருக்கிறது.

இயற்கை வளங்களை பாதுகாப்பது, உள்ளூரில் உணவு உற்பத்தியை ஊக்குவிப் பது நீடிக்கத்தக்க விவசாய நடை முறைகளை கடைப்பிடிப்பது போன்ற செயற்பாடுகள் ஐ.நா மன்றத்தின் புதிய அறிக்கை வலியுறுத்து கிறது. அடிப்படை உணவு தானியங்களான அரிசி, கோதுமை, சோயா போன்றவற்றின் விலைகள், சமீப காலங்களில் தொடர்ந்து பலமடங்கு அதிகரித்திருப்பதன் காரணமாக ஹைதி, எகிப்து, பிலிப்பைன்ஸ் மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த சில வாரங் களில் கடும் கலவரங்கள் நடை பெற்றுள் ளன. உணவு தானியங்களின் சமீபத்திய விலையேற்றங்களுக்கான பின்னணியில், இந்தியா, சீனா போன்ற வளரும் நாடுகளில் தாவர எரிபொருளுக்கான அதிகரித்துவரும் தேவை உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் இருப்பதாக, ஐநாமன்றம் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளது. (ஓ-5)

# தனது சிலையை தானே திறந்து வைத்தார் மாயாவதி

(உத்திரபிரதேசம்)

இந்தியாவின் வடக்கிலுள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதல்வரான மாயாவதி குமாரி, தலைநகர் லக்னோவில் தனது சிலையைத் தானே திறந்து வைத்துள்ளார்.

இந்து சாதிய அமைப்பில் தலித் மக்க ளின் மேம்பாட்டுக்காக செயல்படும் கட்சி யான பகுஜன சமாஜ் கட்சியின் தலைவியான மாயாவதி அந்தக் கட்சியை நிறுவிய காலஞ் சென்ற கன்ஷி ராம் அவர்களின் விருப்பத் துக்கு ஏற்பவே தமது சிலை நிறுவப்பட்டதாகக் கூறுகிறார்.

தனது சிலை நாட்டின் தலைநகரான புது டில்லியிலும் நிறுவப்படும் எனவும் மாயாவதி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அரசியல் தலைவர்கள் தமக்குதாமே சிலை வைத்துக்கொள்வது அசாதா



ரணமான ஒன்று என செய்தியாளர்கள் கூறுகி றார்கள். (ஓ-5)

# இந்தோனேசியாவிலும் அரிசி ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு

(இந்தோனேசியா)

உணவுப்பொருட்களின்விலை அதி கரிப் பினால், வளரும் நாடுகளில் பட்டினி யும் சமூக அமைதியீனமும் உருவாகும் என்ற அச்சம் காரணமாக, தனது அரிசி ஏற்று மதியை கட்டுப்படுத்தியுள்ள, பெரிய அரிசி ஏற்றுமதி நாடுகளின் பட்டியலில் தற்போது புதிதாக இந் தோனேசியாவும் இணைந்துள்ளது.

உள்ளூர் விநியோகத்தை பாதுகாக்கும் முயற்சியாக ஏற்றுமதித் தடையை அமுல் படுத்தியுள்ள வியட்நாம் போன்ற நாடுகளின் உதாரணத்தை தமது நாடும் பின்பற்றும் என இந்தோனேசிய வணிக அமைச்சர் மாரி மாங்கெட்சு கூறியுள்ளார். இந்த நகர்வு காரணமாக அந்தப் பிராந்தியத்தில் தாய் லாந்து மாத்திரமே தொடர்ந்து அரிசியை ஏற் றுமதி செய்து வருகிறது.

## உலக தரிசனம்

இந்த நகர்வு அங்கு ஒரு அச்சம் கலந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி யுள்ளதாக கூறப் படுகின்றது. (ஓ-5)

# குஜராத் மாநிலத்தில் 44 மாணவர்கள் பலி

(வதோதரா)

குஜராத் மாநிலத்தில் மாணவர்களை ஏற் றிச் சென்ற பஸ் ஒன்று நர்மதா ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 44க்கும் மேற் பட்ட மாணவர்கள் பரிதாபமாக பலியானார் கள்.

நேற்று அதிகாலை நர்மதா அணைக்கட் டின் மீது சென்று கொண்டிருந்த பஸ், பாலத் தின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

குஜராத் மாநிலம் வதோதரா அருகே உள்ள தார்போட் என்னும் கிராமத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பள்ளி மாண வர்கள் பஸ் ஒன்றில் படோலி எனும் ஊருக்கு சென்று கொண்டிருந்தனர்.

நர்மதா அணைக்கட்டு மீது பஸ் சென்று கொண்டிருந்த போதே அணைக்கட்டின் சுவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

பஸ் ஆற்றில் விழுவதை பார்த்த கிராம வாசிகள் உடனே தீயணைப்பு படையின ருக்கு தகவல் கொடுத்தனர். இதனையடுத்து தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். கிராமவாசிகளும் அவர் களுக்கு உதவி செய்தனர்.

மீட்பு பணியில் உதவும் வகையில் சர்தார் சரோவர் அணைக்கட்டில் இருந்து வெளியேற் றப்படும் தண்ணீர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 44க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பலியானதாகவும் பலியா னவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-5)

# குண்டுவெடிப்பு குற்றவாளி நேபாள தேர்தலில் வெற்றி

(காத்மாண்டு)

காத்மாண்டுவில் 2007இல் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பாக பொலிஸாரால் தேடப்படும் நபர் நேபாளத் தேர்தலில் சுயேச் சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுள் ளார்.

அவர் பெயர் பபன் சிங் காத்மாண்டுவில் நடந்த குண்டுவெடிப்பில் 3பேர் இறந்தனர். பலர் காயம் அடைந்தனர். இது தொடர்பாக அவரை பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில் ரவ்தஹத் தொகுதியில் அவர் பேட்டியிட்டார். அவர் சார்பாக அவரது தந்தை தேர்தல் பிரசாரம் செய்தார். என் மகனை தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற அவனுக்கு வாக்களியுங்கள் என்று அவர் பிரசாரம் செய்தார்.

தேர்தலில் பபுன் சிங் வெற்றி பெற்றார். தேர் தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை அவரது தந்தையிடம் தர தேர்தல் அதிகாரிகள் மறுத்துவிட்டனர். வேட்பாளரே நேரில் வந்து கையெழுத்து போட்டால் தான் சான்றிதழ்தர முடியும் என்று கூறிவிட்டனர். (ஓ-5)

# தொழிற்சாலைகளில் இருந்து புகை வெளியேறுவதை தடுக்க புதிய தொழில் நுட்பம் கண்டுபிடிக்க வேண்டும்

## என்கிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

உலகம் வெப்பமயமாவதை தடுக்க வேண்டுமானால் காற்றை மாசுபடுத்தும் புகையை வெளியிடும் தொழிற்சாலைகளை மூடவேண்டும். இதற்கு அமெரிக்கா சம் மதிக்க மறுக்கிறது. அப்படி அந்த தொழிற்சாலை களை மூடினால் அவை எல்லாம் இந்தியா மற்றும் சீனாவுக்கு போய்விடும் என்று அது அஞ்சுகிறது.

உலகம் வெப்பமயமாகி வருவது உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. தொழிற் சாலைகள் வெளிப்படுத்தும் நச்சுப்புகையும் வாகனங்கள் மற்றும் குளிர் அலமாரிகள் வெளிப்படுத்தும் கரியமில வாயுவும் தான் உல கம் வெப்பமயமாகி வருவதற்கு முக்கிய கார ணம் ஆகும். இதை கட்டுப்படுத்தாவிட்டால் பனி மலைகள் உருகி கடல் மட்டம் உயர்ந்து விடும் அப்படி நடக்குமானால் இயற்கைச்சீற் றங்கள் கட்டுமீறி போய்விடும். மழை பெருகும் வெயில் கொளுத்தும்.

இயற்கை நிலைகுலைவதை தடுக்க வேண்டுமானால் நச்சுப்புகையை வெளியி டும் தொழிற்சாலைகள் மூடப்படவேண்டும் இதற்காக ஒரு ஒப்பந்தம் வளர்ந்த நாடுக ளுக்கு இடையே கையெழுத்தானது. இதற்கு கியோட்டா ஒப்பந்தம் என்று பெயர் ஜப்பானில் உள்ள கியோட்டோ நகரில் இந்த ஒப்பந்தம் கையெழுத் தானதால் இதற்கு இந்த பெயர் சூட்டப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்த அமெ ரிக்கா மறுக்கிறது. இது பற்றி வெள்ளை மாளிகை பத்திரிகை செயலாளர் டானா பெரி னோ நிருபர்களிடம் கூறியதாவது, 'உலகம் வெப்பமயமாவதை தடுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வளர்ந்த நாடுகளுக்கு இடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வளரும் நாடுகள் சேர்த்துக் கொள்ளப்படாதது எங்களுக்கு கவலை அளிக் கிறது.

புகைவெளியேறுவதைத் தடுக்க புதிய தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்படவேண்டும். அது இல்லாமல் புகைகளை வெளியிடும் தொழிற்சாலைகளை மூட உத்தரவிட்டால் அந்த தொழில் அதிபர்கள் இந்தியாவுக்கோ அல் லது சீனாவுக்கோ போய் அதே தொழிற்சாலை களை நடத்துவார்கள். அந்த நாடுகள் இந்த ஒப் பந்தத்தில் கையெழுத்திடாததால் அவற்றுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது.

எனவே இந்த ஒப்பந்தத்தில் வளர்ந்து வரும் நாடுகளையும் சேர்த்துக்கொள்ள வேண் டும். அல்லது புகைவெளியிடுவதை தடுக்க புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட வேண் டும். அதுவரை நாங்கள் எந்த நடவடிக் கை யையும் அவசரப்பட்டு எடுக்க முடியாது. என்று அந்த அதிகாரி தெரிவித்தார். (ஓ-5)

# உலகிலேயே அதிகளவில் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுவது சீனாவில் தான்

## லண்டன் மனித உரிமை அமைப்பு

(லண்டன்)

சீனாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடை பெறும் காலகட்டத்தில் 400பேருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட இருக்கிறது. என லண்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் இயக்கு னர் காடி அலீன் கூறியதாவது,

சீன அரசு இரகசியமாக தூக்கு தண்ட னைகளை நிறைவேற்றி வருகிறது. நாளொன் றுக்கு 22 கைதிகள் தூக்கிலிடப்பட்டு வருகின் றனர். ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் கால கட்டத்தில் 374 பேருக்கு தூக்கு தண்டனை நிறை வேற்றப்படவுள்ளது.

உலகிலேயே தூக்கு தண்டனைகள் அதிக ளவில் நிறைவேற்றப்படுவது சீனாவில் தான். கடந்த ஆண்டு மட்டும் 470 பேருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தூக்கு தண்டனை நிறைவேற்றுவதில் சீனா வுக்கு தங்கப்பதக்கமே தரலாம் அந்த அளவுக்கு தூக்கு தண்டனைகளை சீன அரசு நிறை வேற்றி வருகிறது.

2008ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டி கள் சீனாவில் ஓகஸ்ட் மாதம் துவங்குகின்றன சர்வதேச விளையாட்டு வீரர்கள் சீனாவுக்கு வருகை தரவுள்ளனர்.

இந்நிலையில் சீனாவில் நிறைவேற்றப் படும் தூக்கு தண்டனைகள் குறித்து ஒலிம்பிக் குழுவும் சர்வதேச சமூகமும் கேள்வி எழுப்ப வேண்டும்.

தூக்கு தண்டனைகள் குறித்த விபரங்களை வெளியிடுமாறும் வலியுறுத்த வேண்டும் என அந்த அமைப்பின் இயக்குநர் தெரிவித்துள் ளார்.

வரி செலுத்தாமை, மின்சாரநிலையங் களை சேதப்படுத்துதல், பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய மருந்துப் பொருட்களை விற்பனை செய் தல், போதைப் பொருள்கள் பயன்படுத்துதல் உள்ளிட்ட 70 குற்றங்களுக்காக சீனாவில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்படுகிறது. (ஓ-5)

# சர்வதாரி வருடம் உங்களுக்கு எப்படி?




உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானம் மற்றும் ராசியில் சஞ்சரித்து வந்த ராகு- கேது பகவான்கள் 30.4-08 அன்று ருண ரோக சத்ரு ஸ்தானத்திற்கும் அயன சயன மோக்ஷ ஸ்தானத்திற்கும் முறையே 6,12 என்கிற ராசிகளுக்கும் பெயர்ச்சியாவது சிறப்பாகும். ருண ரோக சத்ரு ஸ்தானத்தில் பலமாக சஞ்சரிக்கும் ராகு பகவானால் உங்களின் தேக ஆரோக் கியம் பலப்படும். அறிவாற்றல் கூடும். கடன்கள் தீரும்.

பங்காளிகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பார்கள். வழக்குகளில் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும் அதேநேரம் அயன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் உங்களின் தெய்வ வழிபாட்டிற்கு தக்க பலன்களை உடனுக்குடன் கிடைக்கச் செய்வார். நீங்கள் யோகா, ப்ராணாயாமம் போன்ற சூட்சுமக் கலைகளில் தேர்ச்சி பெறுவீர்கள். வெளிநாட்டுக்குச் சென்று வரும் வாய்ப்புகளும் உண்டாகும்.

அதேசமயம் சிலருக்கு தாயின் உடல் நலம் கவனிக்கப்படவேண்டிவரும் மேலும் சரியான நேரத்தில் உறக்கமோ உணவு உண்பதோ இராது. வரவு சீராக இருந்தாலும் செலவு சற்று கூடவே செய்யும். மற்றபடி அடுத்தவர்களின் முக பாவனையைக் கொண்டே அவர்களின் மனத்தைப் படித்துவிடும் திறமையும் உண்டாகும். இந்தக் கால கட்டத்தில் உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் சனிபகவான் இந்த ஆண்டு இறுதி வரை குருபகவானின் பார்வையில் உள்ளதால் உங்களின் செயல்களை ஓசையில்லாமல் முடித்துவிடுவீர்கள். உங்களின் யூகங்கள் பலிக்கும் தேக ஆரோக்கியம் நன்றாக இருப்பதுடன் மேனியில் நல்ல பொலிவு உண்டாகும். உற்றார், உறவினர்கள், விலகிச் சென்ற நண்பர்கள் பகை மறந்து நட்புடன் பழகுவார்கள். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு சனிபகவான் உங்களின் பொறுப்புகளைக் கூட்டுவார். அதேநேரம் சிலருக்கு பங்காளிகளுடன் பகை உண்டாகும்.

உங்களை அழகுபடுத்திக் கொள்வதை நீங்களே அலட்சியப்படுத்திக் கொள்வீர்கள். உங்களின் கிரகிப்பு ஆற்றல் குறையும். அதே சமயம் இந்த ஆண்டு இறுதிவரை குரு பகவானின் பரிபூரண அருளால் உங்களின் அனைத்துச் செயல்களும் வெற்றி பெறும். சமூகத்தில் முக்கியஸ்தர் என்கிற அந்தஸ்தைப் பெறுவீர்கள். இந்த ஆண்டு இறுதிக்குப் பிறகு குரு பகவான் ராகு பகவானுடன் இணைவதால் வயிற்றுவலி ஜீரணக் கோளாறு மற்றும் சிறு சட்டச் சிக்கல்கள் உண்டாகலாம்.

உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவார்கள். அதேநேரம் சக ஊழியர்கள் சிலர் உங்களுடன் பகைமை பாராட்டுவார்கள். அனைவரிடமும் நல்ல முறையில் பேசிப் பழகவும் மற்றபடி வருமானத்திற்குக் குறைவிராது. அலுவலக ரீதியான பயணங்களில் நல்ல பலனைக் காண்பீர்கள்.

வியாபாரிகள் சற்று கூடுதலான பலன்கள் காண்பர். கொடுக்கல் வாங்கலில் சராசரிக்கும் அதிகமான லாபம் இருக்கும் சமூகத்தில் புதிய அந்தஸ்து கிடைக்கும் பழைய கடன்களை திருப்பி அடைப்பீர்கள். வாடிக்கையாளர்களைக் கவர புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள் அதே சமயம் கூட்டாளிகளிடமும் நண்பர்களிடமும் கலந்தாலோசித்த பிறகே அனைத்து முயற்சிகளையும் நிறை வேற்றவும்.

விவசாயிகளுக்கு எதிர்பாராத பணவரவு உண்டாகும். இதனால் குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். மேலும் பழைய கடன்களை அடைத்து நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள் புதிய நிலங்கள் குத்தகைக்கு வந்து சேரும் வங்கிக் கடன் கிடைக்கும் பால் வியாபாரம் செய்பவர்கள் அதிக லாபத்தைப் பெறுவார்கள்.

அரசியல்வாதிகளுக்கு பெயரும் புகழும் அதிகரிக்கும் அவர்களின் பணியாற்றும் திறனை கட்சி மேலிடம் பாராட்டும் தொண்டர்களை உற்சாகப்படுத்துவீர்கள் உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும் வெளியூர் பயணங்களில் வெற்றி பெறுவீர்கள்.

கலைத்துறையினருக்கு பழைய ஒப்பந்தங்களை முடித்துக்கொடுப்பதில் சிரமங்கள் ஏற்பட்டாலும் இறுதியில் அனைத்தும் சரியாக முடியும். உங்களின் திறமைகள் வெளி உலகுக்கு வெளிப்படும் அதே சமயம் ரசிகர்களின் ஆதரவைத் தக்க வைத்துக்கொள்ள சற்று விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும்.

பெண்மணிகளுக்கு கணவரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும் ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை நிறையும் அதே சமயம் உற்றார் உறவினர்களிடம் மனம் திறந்து பேச வேண்டாம் மற்ற படி குழந்தைகளால் பெருமையடைவீர்கள்.

மாணவமணிகள் படிப்பில் கவனத்துடன் ஈடுபடவும் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் அனுசரித்து நடந்து கொள்ளவும் மனதை ஒரு நிலைப்படுத்த தியானம் மற்றும் யோகா போன்றவற்றில் ஈடுபடவும். (தொடரும்)

## உலக புத்தக தின நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்குப்பிரதேச சபை ஏப்ரல் 23 இல் அனுஷ்டிக்கப்படும் உலக புத்தக தினத்தை முன்னிட்டு பிரதேச பாடசாலைகளுடனும் சனசமூக நிலையங்களுடனும் இலக்கியவாதிகளுடனும் இணைந்து நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்வில் பூரண மனிதனாகத் தேவையானது என்ற தலைப்பில் வாசித்தலே, யோசித்தலே, நேசித்தலே, பூசித்தலே என நான்கு கோணங்களில் பாடசாலை அணிகள் வாதிட எ. அனுசாந்தன் நடுவராகப் பங்கேற்கும் பட்டிமன்றமும்,

'மனித மேம்பாட்டுக்கு வளமான வாசிப்பே துணை செய்யும்' என்ற தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் கு.றஜீபன், கவிஞர் துரையர் பா.மகாலிங்கசிவம், திருமதி பாகீரத் கணேசதுரை, இயல்வாணன் ஆகியோர் பங்கேற்கும் கவியரங்கமும், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் வழங்கும் 'புத்தகம் தரும் வித்தகம்' என்ற வில்லிசை நிகழ்வும் பிரதேச வாசகர் வட்டவெளியீடான 'வெள்ளிமலை' 3ஆவது இதழ் வெளியீடும் நடைபெறவுள்ளன.

ஏப்ரல் 24,25,26,27ஆம் திகதிகளில் உடுவில் பொதுநூலகத்தில் நடைபெறும் புத்தகக்கண்காட்சியில் யாழ். பிரபல புத்தகசாலைகளின் விற்பனைக்கூடங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என் சுன்னாகம் வலி தெற்கு பிரதேச சபை பொது நூலக நூலகர் க.சௌந்தரராஜன் அறிவித்துள்ளார். (ஓ)

## இலவச பாடநூல்கள்

(அல்வாய்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கான இருபது வீத இலவசப் பாட புத்தகங்கள் எடுத்து வரப்பட்டு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனை மாவட்டத்தில் உள்ள 5 வலய பணிப்பாளர்களும் சென்று பார்வையிட்டு தத்தம் பகுதிகோட்டங் களுக்குரிய புத்தகங்களைஎடுத்துச் சென்று மாணவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ஓ)

## சுவிஷேஷக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பெந்த கோஸ்த சபையின் சுவிஷேஷக்கூட்டம் இன்று வியாழக்கிழமை முதல் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை யாழ்ப் பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள பெந்த கோஸ்த சபை நிலையத்தில்தினமும் காலை9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடை பெறவுள்ளது என சபையின் ஊழியர்களும் விசுவாசிகளும் அறிவித்துள்ளனர். (ஓ)

# தமிழன் என்று சொல்லிக்கொள்ளும் உரிமையற்ற அவமானகரமான பள்ளத்தாக்கில் நாம் இருக்கிறோம்

## தமிழகமுதல்வர் மு.கருணாநிதி

(சென்னை)

'நாம் தமிழன் தான் என்று சொல்லிக் கொள்ளும் உரிமையை இன்னும் பெறவில்லை என்று தமிழக முதல்வரும் தி.மு.க தலைவருமான கருணாநிதி கூறினார்.

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் உள்ள தமிழ்ப்பீடம் வெளியிட்ட



கலைஞர் களஞ்சியம் நூலை அமெரிக்கத் துணைத் தூதர் டேவிட் ஹொப்பர் வெளியிட தமிழக முதல்வர் கருணாநிதி பெற்றுக்கொள்கிறார். அருகில் தமிழ்கழகத்தின் தலைவி வெற்றிச்செல்வி இராஜமாணிக்கம்.

கலைஞர் களஞ்சியம் என்ற நூலை கருணாநிதியிடம் சென்னையில் உள்ள அமெரிக்க துணைத்தூதர் டேவிட் ஹொப்பர் செவ்வாய்க் கிழமை வழங்கினார்.

அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் பேசிய போது,

பல ஆண்டுகள் என் வாழ்க்கையில் தமிழ்ச் சங்க இலக்கியங்களை படித்து அறிந்திருக்கிறேன். புறநானூற்றையும் சங்க இலக்கியத்தில், பல பாடல்களையும் நான் தொடர்ந்து படித்து அவற்றை மேலும் அழகுபடுத்தும் வகையிலே. எல்லோருக்கும் புரிகின்ற வகையிலே எளிய நடையிலே வழங்கியிருக்கின்றேன்.

இந்த நூலில் இருக்கிற கட்டுரைகள், கதைகள், கவிதைகள் எல்லாம் நான் பல நேரங்களில் எழுதியவை. இவைகள் எல்லாம் இந்த ஒரு நூலுக்குள் அடங்கவில்லை. 1957ஆம் ஆண்டிலிருந்து சட்டப்பேரவையில் நான் பணியாற்றி இதுவரையில் இந்த 50 ஆண்டு காலத்தில் பேசிய பேச்சுக்களை எனது செயலாளர் சண்முகநாதன் தொகுத்து இதே போன்று நூல் வடிவில் உருவாக்கியுள்ளார். இவ்வளவா நாம் பேசியிருக்கின்றோம் என்று திகைப்பாக இருந்தது.

நாம் தமிழன் தான் என்று சொல்லிக் கொள்ள இன்னும் உரிமை பெறவில்லை. அந்த அவமானகரமான ஒரு பள்ளத்தாக்கில் இன்றைக்கு நாம் இருக்கின்றோம்.

மறை மலை அடிகளார் தலைமையில் 500ற்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள் கூடி தைத்திருநாளை தமிழர் திருநாளாக அறிவிப்பது என முடிவெடுக்கப்பட்டது. வள்ளுவர் ஆண்டு தான் நாம் வருடப்பிறப்பாக நாம் கொண்டாட வேண்டும் என முடிவு செய்து சட்டப் பேரவையில் அனைவரின் ஒருமித்த கருத்தையும் பெற்று வெளியிடப்பட்டது. அதை விமர்சிப்பதை பற்றி நான் கவலைப்பட வில்லை. நம்முடைய தமிழனை இப்படியாவது யாராவது கேலி செய்து தூண்டி விட்டால்த்தான் அவன் சொரணையோடு எழுந்து நடமாடுவான் என்றார் கருணாநிதி.

அமெரிக்காவின் பெர்க்ளி நகரிலுள்ள கலிபோனியா பல்கலைக்கழகத்தில் தெற்காசிய ஆய்வு மையத்தமிழ் பீடத்தின் 10ஆவது ஆண்டு விழாவை ஒட்டி கலைஞர் களஞ்சியம் நூல் வெளியிடப்பட்டது. அமைச்சர்கள், தமிழ் கழகத்தின் தலைவி வெற்றிச் செல்வி இராஜமாணிக்கம் உள்ளிட்டோர் இவ்விழாவில் பங்கேற்றனர். (அ-5)

# கனடாவில் உலக தமிழர் பேரவையின் இரு அலுவலகங்கள் மூடப்பட்டன

(ரொறன்ரோ)

புலிகளுக்கு நிதி சேகரித்த குற்றச்சாட்டின் அடிப்படையில் கனடாவிலுள்ள உலகத் தமிழர் பேரவைக்குச் சொந்தமான இரண்டு கட் டடங்களை பொலிஸார் கடந்த வார இறுதியில் மூடி சீல் வைத்துள்ளனர்.

அத்தோடு அவ்வமைப்பின் வங்கிக் கணக்குகள் உட்பட ஏனைய சொத்துக்களையும் முடக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப்புலிகளுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இதனை முற்றாக மறுத்துள்ள உலகத்தமிழர் பேரவை இதுவரை உத்தியோகபூர்வமாக தமது அமைப்பு மீது எவ்வித குற்றச்சாட்டுக்களையும் பதிவு செய்யவில்லை என கூறியுள்ளதோடு தமது இரு சமூக சேவை நிலையங்களே மூடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

கனடாவின் டொறன்ரோ மொன்ட்றியல் மாகாணங்களிலுள்ள உலக தமிழர் பேரவையின் இரண்டு கட்டடங்களை அம் மாகாண பயங்கரவாத தடுப்புப்பிரிவு பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை மூடி சீல் வைத்துள்ளனர். அத்தோடு அவ்வமைப்புக்கு சொந்தமான வங்கிக் கணக்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உலகத் தமிழர் பேரவை விடுதலைப்புலிகள் அமைப்பிற்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவின் பேரிலேயே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கனேடிய பத்திரிகையொன்றிற்கு கருத்து தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவையின் சட்டத்தரணி ஸ்ரீவான் ஸ்லிம்மோவிச் விடுதலைப்புலிகள் அமைப்புக்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டமைதொடர்பான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கடந்த 2006ஆம் ஆண்டு எமது அலுவலகங்களை சோதனையிட்ட பொலிஸார் அங்கிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்வதற்காக எடுத்துச் சென்றனர். எனினும் இரண்டு வருடங்கள் சென்ற நிலையிலும் எமது அமைப்புக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டையும் பதிவு செய்யவில்லை.

இந்நிலையில் எமது அமைப்பின் சமூக நல சமூக சேவை நிலையங்களை கடந்த வெள்ளிக்கிழமை மூடி சீல் வைத்துள்ளனர். இலங்கையிலுள்ள தமிழர்களுக்காகவே நாம் நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றோம். நாம் விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு எந்த நிதியையும் அனுப்பவில்லை. அத்தோடு விடுதலைப் புலிகள் அமைப்பு இதுவரை கனேடிய அரசாங்கத்தால் தடை செய்யப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே இதனை சட்ட ரீதியில் சந்திக்க நாம் தயாராக உள்ளோம் எனக்கூறினார். (ஓ-5)

# தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடத் தயார் ஜே.வி.பி. அதிருப்திக் குழு தெரிவிப்பு

(கொழும்பு)

தற்பொழுது ஏற்பட்டிருக்கும் வேறுபாடுகள் குறித்து கட்சியின் தலைமைப்பீடத்துடன் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக ஜே.வி.பி.யின் அதிருப்திக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அதிருப்தியாளர்கள் பலர் மீண்டும் தலைமைத்துவத்துடன் இணைந்து கொண்டதாக வெளியான தகவலை ஜே.வி.பி அதிருப்திக் குழுவின் பேச்சாளர் ஜயந்த சமரவீர மறுத்துள்ளார். கீழ்த்தரமான உத்திகளைப் பாவித்து கட்சியை மேலும் பலமிழக்கச்செய்ய வேண்டாமென கட்சியின் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுப்பதாக கொழும்பு ஊடகமொன்றிடம் அவர் கூறியுள்ளார். பொய்யான கதைகளைப்பரப்பி கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் மேலும் விரிசல்களை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் விமல் வீரவன்ச தலைமையிலான அதிருப்திக் குழுவினருக்கு ஆதரவாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-5)

# 102-வது 'வடக்கின் பெரும் போர்'

# இன்று ஆரம்பம்

உத்தியோக பூர்வ ஊடக அனுசரணை

**வலம்புரி**

## யாழிற்கு பெருமை சேர்க்கும் 'வடக்கின் பெரும் போர்'



'வடக்கின் பெரும்போர்' என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும், யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நூற்றாண்டுகள் கடந்து 102-வது துடுப்பாட்டப் போட்டி இன்று ஆரம்பமாவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வழமையான பாரம்பரியங்களை காத்து, விளையாட்டின் மூலம் ஆரோக்கியமான முறையில் மாணவர்களை வழிநடத்தி செல்வதனையிட்டு இரு கல்லூரி அதிபர்களையும் துறைசார் ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன்.

இரு கல்லூரிகளின் பெருமைக்கு மேலாக யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத்துறைக்கே இவ் 'வடக்கின் பெரும் போர்' பெருமை சேர்க்கிறது. இப்போட்டியில் இரு கல்லூரி வீரர்களும் திறமையாக செயற்பட்டு தமது கல்லூரிகளுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர்**
**யாழ்ப்பாணம்.**

## வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்

'வடக்கின் பெரும்போர்' என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் துடுப்பாட்டப்போட்டிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

கல்விச் செயற்பாட்டில் விளையாட்டு என்பது முக்கியமான துறை. அந்த வகையில் 'வடக்கின் பெரும்போர்', 102-வது தடவையாக நடைபெறுகின்றமையானது மிகப் பெரும் சாதனையாகும்.

இவ்வாறான பெரும் துடுப்பாட்டப்போட்டிகள் சில பாடசாலைகளுக்கிடையே மட்டுமே நடைபெறுகின்றது. இவ்வாறான போட்டிகள் நடத்துவதை அனைத்துப் பாடசாலைகளும் கடைப்பிடிக்க வேண்டும். விளையாட்டுப்போட்டிகளின் மூலம் தமது கல்லூரிகளுக்கு பெருமை சேர்க்க வேண்டும் என இரு கல்லூரி வீரர்களையும் வாழ்த்துகின்றோம்.

**வி.இராசையா**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடக்கு**

**ஆர்.யூ.பாலமுருகன்**

## ஆட்டம் சிறப்புற நடைபெறுவதற்கு ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்



'வடக்கின் மாபெரும் போர்' என இலங்கையில் பிரபல்யம் பெற்றிருக்கும் சென்றல் - சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 102-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று தொடக்கம் 18, 19 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. மூன்று நாட்கள் கொண்ட போட்டியாக வடபகுதியில் நடைபெறும் போட்டி இது ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது.

வடபகுதியில் முதன் முதல் 1881ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அப்போதைய அதிபர் வண. பிரட்றிக் வெப்ஸ்ரர் என்பவரால் கிரிக்கெட் அறிமுகப்படுத்தி 1904 ஆம் ஆண்டுமுதல் இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் மாபெரும் கிரிக்கெட் போட்டி ஆரம்பிக்கப்பெற்று ஒரு நூற்றாண்டைக் கடந்துள்ளது. இரண்டு நூற்றாண்டுகளை அண்மித்த நீண்ட வரலாற்றையும் பாரம்பரியத்தையும் கொண்ட வடபகுதியிலுள்ள இவ்விரு கல்லூரிகளுக்குமிடையிலான பிணைப்பு இப்போட்டியின் மூலம் வலுப்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் உலகெங்கிலும் இருந்து இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் இப்போட்டியை பார்ப்பதற்கும் தத்தமது கல்லூரித் தாயை தரிசிப்பதற்குமாக யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடுவார்கள்.

ஆனால் தற்போதைய நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இப்போட்டியை கண்டுகளிக்க வெளிநாடுகளில் இருந்தும், ஏன் தென்னிலங்கையிலிருந்தும் பழைய மாணவர்களின் வருகை தடைப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இப்போட்டியினூடாக விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் இக் கல்லூரிகளின் நற்புறவை வலுப்படுத்தவும் வரலாற்று ரீதியான தொடர்பைப் பேணவும் எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் இப்போட்டியினை தொடர்ந்து நடத்தி வருகின்றோம். இன்று ஆரம்பமாகும் இவ்வாட்டம் சிறப்புற நடைபெறுவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

**செ.பத்மநாதன்**
**அதிபர்**
**யாழ்.மத்திய கல்லூரி**

## திறமைகளை வெளிக்கொண்டு வருவதுடன் பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும்



பல்வேறு அரசியல், சமூகப் பிரச்சினைகளுக்கும் மத்தியில் துணிவோடு யாழ்.மண்ணில் நின்று கல்வி பயிலும் மாணவச் செல்வங்களுக்கு புதுத் தெம்பையும் உற்சாகத்தையும் கொடுக்கின்ற ஓர் நிகழ்வே 'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரி -யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான மாபெரும் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியாகும்.

சினேக பூர்வ முறையில் இரு கல்லூரிகளினதும் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பேணிப் பாதுகாத்து விளையாடிவரும் இப்போட்டியானது 104-வது ஆண்டில் காலடி எடுத்துவைத்து 102-வது போட்டியை எதிர்பார்த்து நிற்கின்றது.

கடந்த கால வரலாற்றில் நடைபெற்ற போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33 வெற்றிகளையும் யாழ்.மத்திய கல்லூரி 23 வெற்றிகளையும் அடைந்திருக்கும் வேளையில் விளையாட்டு வீரர்களது நலன் கருதி தற்காலச் சூழ்நிலைக்கேற்ப அமைதியான முறையில் இவ்விளையாட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இப்போட்டியில் வீரர்களது திறமைகள் வெளிக்கொண்டுவரப்படும் அதேவேளை விளையாட்டுப் பண்புகளும், பண்பாட்டு விழுமியங்களும் பேணப்படும் வகையில் அமைய வேண்டியது மிக முக்கியமானதாகும்.

இப்போட்டி மேலும் சிறக்க பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், கிரிக்கெட் விளையாட்டு ஆர்வலர்கள் யாவரினதும் பொறுப்பான பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு கல்லூரி வீரர்களும் சிறப்பாக விளையாடி தமது திறமைகளை வெளிக்காட்ட சென்.ஜோன்ஸ் கல்லூரி குடும்பம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

**வண.என்.ஜே.ஞானப்பொன்ராஜா**
**அதிபர்**
**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

## ஒன்றிணைந்து செயற்படுவோம்



### யாழ்.மத்திய கல்லூரி அணித்தலைவர் பி.டயான்

'வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப்போர்' என வர்ணிக்கப்படும் இப்பெரும் 102-வது துடுப்பாட்டப்போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியின் அணித்தலைவராக செயற்படுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்.மண்ணில் சிறப்பு மிக்க இப்பெரும் துடுப்பாட்டப்போரின் 102-வது இந்தப் போட்டி சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டுகின்றோம்.

இம்முறை யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட காலநிலைச் சீர்கேடு காரணமாக போட்டி நடைபெறுமா என நினைத்திருந்த எமது வீரர்களை அதிபர், விளையாட்டுத்துறையினர் மற்றும் பயிற்றுவிப்பாளரின் பூரண ஒத்துழைப்புடன் எமது அணியை பலம்மிக்க ஒரு அணியாக ஒன்றிணைத்து போட்டியை சிறப்பாக எதிர்கொள்வோம் என கூறுகின்றோம்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்களையும் இப்போட்டியில் சிறப்பாக செயற்படுவதற்கு வாழ்த்துகின்றேன்.

*'மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்'*

## அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

### யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணித்தலைவர் எம்.கரிப்பிரவீன்



'வடக்கின் மாபெரும் மோதல்' என வர்ணிக்கப்படும் இப்பெருந் துடுப்பாட்டம் இந்த வருடம் 102-வது போட்டியாக நடைபெறுகின்றது.

இந்த சிறப்பான தருணத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு அணித்தலைவனாக இருப்பதனை பெருமை மிக்க ஒரு விடயமாக கருதுகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இப்பெருந் துடுப்பாட்டத் தொடர் பலவித பெருமைகளைக் கொண்டது. அவ்வகையில் இவ்வருடமும் இப்போட்டி சிறப்பானதாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

எமது அணியானது எமது அதிபர், விளையாட்டுத்துறை முதல்வர் ஆகியோரின் நெறிப்படுத்தலின் மூலமும் பயிற்றுவிப்பாளரின் வழிநடத்தலின் மூலமும் இப்போட்டியில் சிறப்பாக பங்குபற்றும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

இத்தருணத்தில் மத்திய கல்லூரி அணியை வாழ்த்துவதுடன் இப்போட்டி சிறப்பானதாக அமைய அர்ப்பணிப்புடன் பங்குபற்றுவோம் என கூறுகிறேன்.

*'இருளில் ஒளி பிரகாசிக்கட்டும்'*


## ஆட்டநேரம் ஆரம்பம்

காலை 9.00 மணி - நண்பகல் 12.00 மணி
மதிய போசனம் நண்பகல் 12.00 -பிற்பகல் 12.40 மணி
ஆட்டம் பிற்பகல் 12.40 மணி -பிற்பகல் 2.40 மணி
தேநீர் பிற்பகல் 2.40 மணி - பிற்பகல் 3.00 மணி
ஆட்டம் பிற்பகல் 3.00 மணி - மாலை 4.00மணி

## 101 போட்டிகளின் முடிவுகள் ஒரே பார்வையில்

| | | |
|---|---|---|
| யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி | - | 33 |
| யாழ்.மத்திய கல்லூரி வெற்றி | - | 23 |
| சமநிலை | - | 37 |
| முடிவுகள் கிடைக்கப்பெறாதவை | - | 07 |
| கைவிடப்பட்டது | - | 01 |

# மூன்றாவது ஒருநாள் போட்டி மழையால் பாதியில் ரத்தானது



இலங்கை-மேற்கிந்திய தீவுகளிற்கிடையிலான மூன்றாவது ஒருநாள்போட்டிமழையால் கைவிடப்பட்டது.

இதன்மூலம் ஏற்கனவே 2:0 என்ற கணக்கில் தொடரைத் தனதாக்கிய மேற்கிந்திய தீவுகள் கிண்ணத்தை சுவீகரிக்க இலங்கை அணிஆறுதல்வெற்றியுமின்றி தோல்வியுடன் நாடு திரும்புகின்றது.மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்த இலங்கை அணி 2டெஸ்ட், 3ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. இதில் டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமனிலையில் முடிபுற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரின் முதலிரண்டு போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்று தொடரை தனதாக்கியது.

தொடரின் மூன்றாவது இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் சென் லூசியாவில் நடைபெற்றது.இப் போட்டியில் வெற்றி பெற்றாவது தொடரில் ஆறுதல் வெற்றி கிடைக்குமென களமிறங்கியது இலங்கை அணி.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் சங்கக்காரா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து உடவத்தவுடன் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா இணைந்தார்.

இந்நிலையில் 3 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் இலங்கை அணி 1விக்கெற்றை இழந்து 5ஓட்டங்கள் எடுத்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. பின்னர் சிறிது நேரத்தில் மழை விட இலங்கை அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடி 50ஓவர்கள் நிறைவில் 8விக்கெற்றுக்களையிழந்து 257 ஓட்டங்களை எடுத்தது.

இதில் உடவத்த 73 ஓட்டங்களையும் திலகரட்ண டில்சான் 64 ஓட்டங்களையும் மற்றும் வீரரட்ண 41, கபுகெதர 40 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் பவல்பிரவோ மற்றும் ஹையில் ஆகியோர்தலா 2விக்கெற் றுக்களை வீழ்த்தினர்.



பதிலுமுக்கு 50 ஓவர்களில் 258 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 18:2 ஓவர்களில் 2விக்கெற்றுக்களையிழந்து 81 ஓட்டங்களை எடுத்தபோது மீண்டும் மழை குறுக்கீடு செய்ய ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.எனினும், மழை நீண்ட நேரம் நீடிக்க ஆட்டம் கைவிடப்பட்டதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால் மூன்றா வது ஒரு நாள் போட்டி முடிபுகளின்றி கைவிடப் பட்டது.

இதில் சற்றக்கோன் 46 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்ததுடன் ஆட்டமிழக்காமல் சர்வான் 13,சாமுவேல்ஸ் 3 ஓட்டங்களுடன் களத்தில் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி தொடரைக் 2:0 என்ற கணக்கில் சுவீகரித்தது. (5)

## பாக்.,இலங்கை,பங்களாதேஷ் வீரர்கள் இந்திய அணியுடன் மோதவுள்ளனர்!

(சென்னை)

கோவை கிரிக்கெற் சபையின் பொன் விழா ஆண்டையொட்டி "இருபது -20" சர்வதேச கிரிக்கெற் போட்டியை முதல் முறையாக நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்தியா ஒரு அணியாகவும், பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் வீரர்கள் கொண்ட மற்றொரு அணியாகவும் கொண்டு ஜூன் 13 ஆம் திகதி இப் போட்டியை அங்குள்ள கல்லூரி மைதானத்தில் நடத்த முடிவு செய்து இருக்கிறது. இதற்காக 15 ஆயிரம் ரசிகர்கள் அமரும் வகையில் தற்காலிக கலரி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ) தமிழ்நாடு கிரிக்கெற் சபை ஆகியவற்றின் அனுமதிக்காக காத்திருக்கிறது. தமிழ்நாடு கிரிக்கெற் சபை செயலாளர் கே.எஸ். விஸ்வநாதன் இதை உறுதிசெய்தார். அவர் கூறும் போது இதற்கான பணிகள் நடந்து வருகிறது. இப் போட்டி கண்டிப்பாக நடைபெறும். அதில் எப்பிரச்சினையும் இருக்காது என்றார். (5)




# 'சென்னை சூப்பர் கிங்ஸ்' அணியிலிருந்து பாலாஜி நீக்கம்



ஐ.பி.எல்.முதல்போட்டிக்கான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. உடல் தகுதியில் தேறாத பாலாஜி நீக்கப்பட்டுள்ளார். இந்திய கிரிக்கெற் சபை சார்பில் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பு நடத்தும் 'இருபது -20' தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது. மொத்தம் 8 அணிகள் பங்கேற்கின்றன. தோனி தலைமையிலான 'சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தனது முதல் சவாலில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை நாளை மறுதினம் சந்திக்கிறது. இதற்கான 17 பேர் கொண்ட சென்னை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் உடல் தகுதியில் தேறாத தமிழக வீரர் பாலாஜி நீக்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்காவின் நிற்னி,மோர்கல் சொந்த ஊரில் நடக்கும் போட்டியில் பங்கேற்க இருப்பதால் இடம்பெற இயலவில்லை. தற்போதைய அணியில் நியூசிலாந்தின் பிளமிங், முரளிதரன் (இலங்கை) உள்ளிட்ட 5 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அணி வருமாறு: தோனி (அணித்தலைவர்), பிளமிங், ஓரம்,ஹசி,ஹைடன்,முரளிதரன் , சுரேஷ் ரெய்னா,பார்த்திவ் படேல்,ஜோகிந்தர் சர்மா, வித்யுத் சிவராமகிருஷ்ணன்,அனிருதா ஸ்ரீகாந்த், அஷ்வின்,அமர்நாத், ஷதாப் ஜகதி, அருண் கார்த்திக்,பத்ரிநாத்,மன்பிரித் கோனி.(5)

# தோனிக்கு புதிய சிக்கல் !

## ஆடுகளப் பராமரிப்பாளருக்கு ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கியமையால்

(கான்பூர்)

பரிசுகொடுத்தது தப்பா- என அணித்தலைவர் தோனியை புலம்பவைத்துவிட்டனர்.

கான்பூர் ஆடுகள பராமரிப்பாளருக்கு அணித்தலைவர் தோனி பத்தாயிரம் பரிசாக அளித்தது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. நடத்தை விதிமுறைகளை மீறிவிட்டதாக



அதிர டியாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. கான்பூரில் நடந்த 3ஆவது டெஸ்ட்போட்டியில் இந்திய அணி,தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

மூன்றே நாளில் வென்ற இந்தியா, தொடரை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தது. இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாகவே ஆடுகளம் பற்றி பிரச்சினை எழுந்தது. இந்திய அணிக்கு சாதகமாக ஆடுகளம் அமைக்கப்பட்டிருப்பதாக தென்னாபிரிக்க வீரர்கள் வெளிப்படையாக விமர்சித்தனர். இதனை இந்திய கிரிக்கெற் சபை மறுத்தது. ஆனாலும் ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு பெருமளவில் கைகொடுத்தது.

முதல் நாளில் இருந்தே களத்தில் வெடிப்புகள் காணப்பட்டன. இதனை 'சுழல்' வீரர்கள் சிறப்பாக பயன்படுத்திக்கொண்டனர்.

உதாரணமாக ஹர்பஜன் 7 விக்கெற் வீழ்த்தி வெற்றி நாயகனாக ஜொலித்தார். இவரைத் தவிர சேவக், யுவராஜ் உள்ளிட்ட பகுதிநேர சுழற்பந்து வீச்சாளர்கள் கூட விக்கெற் வேட்டை நடத்தினர்.

இப்படி ஒரு அருமையான ஆடுகளம் அமைத்துக்கொடுத்த பராமரிப் பாளர் ஷிவ் குமாரை பாராட்டி அணித்தலைவர் தோனி ரூ. 10ஆயிரம் பரிசு அளித்தார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இவர் நடத்தை விதிமுறைகளை மீறிவிட்டதாக விமர்சிக்கப் பட்டு வருகிறது. இப் பிரச்சினை யில் அணித் தலைவர் தோனிக்கு.இந்திய கிரிக்கெற் சபை (பி.சி.சி.ஐ) ஆதரவு தெரிவித் துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# 'இருபது -20' போட்டியால் ஒருநாள் போட்டி பாதிக்கும்

## முரளிதரன் சொல்கிறார்



"இருபது -20" போட்டிக்கு நல்ல எதிர் காலம் உள்ளது.இதனால் ஒரு நாள் போட்டி பாதிக்கப்படலாம் என்று இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் கூறினார்.

இந்திய பிரிமியர் லீக் சார்பில், "இருபது -20" கிரிக்கெற் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இதில் 8 நகர அணிகள் கலந்துகொண்டு மோதுகின்றன. கோடிக்கணக்கில் செலவிட்டு பிரபலங்களால் வாங்கப்பட்டுள்ள இந்த அணிகளில் வெளிநாடு மற்றும் இந்திய வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.இதன் முதலாவது ஆட்டம் பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நாளை நடக் கிறது. இதில் பெங்களூர் ரோயல் சேலஞ்சஸ்- கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோது-கின்றன.

ஐ.பி.எல்.போட்டிக்கான சென்னை 'சூப்பர் கிங்ஸ்' அணி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் தினசரி காலையும்,மாலையும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது.சென்னை அணியில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி யின் முன்னணி சுழற் பந்து வீச்சாளர் முரளிதரன் நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

ஐ.பி.எல். 'இருபது -20' போட்டியில் சுழற்பந்து வீச்சாளர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள். குறிப்பாக இந்தியாவில் உள்ள ஆடு களங்கள் எப்பொழுதும் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். சுழற்பந்து வீச்சாளர்கள் ஒரு சமயம் ஓட்டங்களை விட்டுக்கொடுக்க நேர்ந்தாலும் விக்கெற்றுக்களை சாய்ப்பார்கள். நான் இங்கிலாந்தில் உள்ள உள்ளூர் அணிகளில் 7க்கும் மேற்பட்ட 'இருபது-20' போட்டி களில் விளையாடி இருக்கிறேன். இதனால் 'இருபது -20' போட்டிக்கு ஏற்ப ஆடுவதில் பிரச்சினை இருக்காது. இந்தப் போட்டியில் ஆடும் எல்லா அணிகளுமே சிறப்பானது தான். இதனால் எந்த அணி வெற்றிபெறும் என்று சொல்ல முடியாது. போட்டி நாளன்று எந்த அணி சிறப்பான திறனை வெளிப்படுத்துகிறதோ? அந்த அணி வெற்றி பெறும். சென்னை அணியின்தலைவராக தோனி உள்ளார். அவர் மிகவும் ராசியானவர். அவரது தலைமையில் இந்திய அணி 'இருபது -20' கோப்பை உட்பட பல போட்டிகளில் வெற்றி பெற் றுள்ளது. அந்த வெற்றி ராசி இந்தப் போட்டி யிலும் தொடரும் என்று நம்புகிறேன்.

சென்னை ஆடுகளம் சுழற் பந்து வீச்சுக்கு அனுகூலமாக இருக்கும். மழை காரணமாக தென்னாபிரிக்கா-இந்தியா இடையேயான முதல் டெஸ்டில் சேப்பாக்கம் ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சு எடுபடவில்லை. மற்றபடி வழக்கமாக இங்கு சுழற்பந்து வீச்சு நன்றாக எடுபட்டு இருக்கிறது. பந்து நன்றாகவும் பவுன்சாகும். எந்த ஒரு போட்டியில் ஆடினாலும் வெற்றி பெற வேண்டும் என்பது தான் எல்லாத் தொழில் முறை வீரர்களின் நோக்கமாக இருக்கும். பல நாட்டு வீரர்கள் ஒரு அணியில் இடம்பெறுவதால் பிரச்சினை இல்லை. கால்பந்து ஆட்டத்தில் கழகங்களிற்காகவும், நாட்டு அணிக்காகவும் வீரர்கள் ஆடுகிறார்கள்.அதுபோல் தான் நாங்களும் எங்கள் நாட்டுக்கு ஆடுவது போல் தான் இந்த அணியில் ஆடும்போதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற முயற்சிப்போம்.

### ஒரு நாள் போட்டி பாதிக்கும்

டெஸ்ட் போட்டி தான் எப்போதும் சிகரமாகும். இந்த அவசரமான கால கட்டத்தில் ஒரு போட்டியின் 5 நாள் ஆட்டத்தையும் அதிகம் பேர் பார்ப்பது என்பது கடினமான காரியம். குறுகிய நேரத்தில் நடந்து முடியும் "இருபது-20" போட்டிக்கு வருங்காலத்தில் நல்ல எதிர் காலம் உள்ளது. இளைஞர்களை அதிகம் கவர்ந்துள்ள இந்தப் போட்டி நல்ல பொழுதுபோக்காக உள்ளது.ஆனால் 'இருபது-20' போட்டியால் ஒருநாள் போட்டி (50 ஓவர்) பாதிக்கப்படும் அச்சம் உள்ளது என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். சென்னை அணிக்காக ஆடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனெனில் எனது மனைவியின் ஊர் சென்னையாகும். அதோடு எனது மூதாதையர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். எனவே இந்த அணிக்காக ஆடுவதை கௌரவமாக கருதுகிறேன். 4 ஓவர்கள் தான் பந்து வீச முடியும் என்றாலும் அதற்கு தக்கபடி தயாராகி விடுவோம். துடுப்பாட்ட வீரர்களும் எங்களை போலத்தான் சூழ்நிலைக்கு ஏற்ப வேகமாக அனுசரிக்க வேண்டியுள்ளது இவ்வாறு முரளிதரன் கூறினார். (5)

சண்டைக்கு இருவர் தேவை. நீங்கள் அவ்விருவரில் ஒருவராய் இருக்காதீர்கள்.

–ஆவ்பரி

வலம்புரி

## இராணுவத் தளபதியின் கூற்றுரை சமாதானத்தை அடியோடு பாதிக்கும்

யாழ்ப்பாண முன்னரங்கப் பகுதியில் இருந்து பாரிய இராணுவ நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படுமென இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இராணுவத் தளபதியின் மேற்போந்த கூற்று இலங்கையில் எதிர்காலத்திலும் சமாதானம் சாத்தியப்படாதென்பதையே எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

இராணுவத் தளபதியின் பொறுப்பு படை நடவடிக்கையை முன்னெடுப்பது என்ற கருத்தியல் இருக்குமாயின் அது மிகப்பெரும் த்வறாகும்.

இராணுவத் தளபதியிடம் போரை முன்னெடுக்கும் உபாயத்திற்கு அப்பால் நாட்டில் நிலைத்த சமாதானத்தை எவ்விதம் ஏற்படுத்தலாம் என்ற சிந்தனை ஓட்டமும் அவசியமாகும்.

யுத்தத்தை ஆரம்பிப்பது சாதாரண விடயம். அதில் வெற்றி தோல்வி என்பது வேறு கதை. ஆனால் யுத்தத்தின் முடிபு அழிவாகவே அமையும்.

அந்த அழிவு மனித அழிவாக,பொருளாதார அழிவாக இருக்கும் என்பதால் அதனை ஈடு செய்வதென்பது முடியாத காரியமாகி விடும். அதில் குறிப்பாக மனித உயிரழிவை எவராலுமே ஈடு செய்ய முடியாது.

இதனை படைத் தளபதிகளும் போரில் ஈடுபட்டுள்ளோரும் சிந்தித்தாகவேண்டும். ஈடு செய்ய முடியாத அவலத்தை ஏற்படுத்தியபின் சமாதானம் என்பது யாருக்கானது? அந்தச் சமாதானத்தால் யாருக்கேனும் நன்மை கிடைக்குமா?

போரை நடத்தி அதில் வெற்றி கண்டால் கூட அந்த வெற்றி சதா மனவேதனையையும் நிம்மதியற்ற வாழ்வையுமே தரும். இதுவே நிஜம்.

உலக நாடுகளின் வரலாறுகளைப் பார்க்கும் போது போரில் ஈடுபட்ட நாடுகள் அனைத்துமே இன்றுவரை அவலம் நிறைந்த நாடுகளாகவே இருக்கின்றன. இத்தகைய நிலை இலங்கைக்கு ஏற்படக்கூடாதென்பதே அனைவரினதும் விருப்பாகும்.

இலங்கைத் திருநாடு கடந்த பல வருடங்களாக சந்தித்த போரின் தாக்கத்திலிருந்து மீள வேண்டுமாயின் எதிர்காலத்தில் நிம்மதியான – அமைதியான நாடாக விளங்கவேண்டுமாயின் பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தை அடைவதே ஒரேவழியாகும். இதற்காக இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் பாடுபடவேண்டும்.

அதிலும் குறிப்பாக படைத்தளபதிகள் போரை ஊக்கிவிக்காமல் சமாதானத்தை ஏற்படுத்த பாடுபடவேண்டும். அதுவே இந்த நாட்டிற்கு அவர்கள் செய்யும் பெரும் நன்மையாகும்.

## வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறையை நிவர்த்திக்க வெளிநாட்டு உதவிகளை நம்பியிருக்கவில்லை

### ஜீ.எல்.பீரிஸ்



(கொழும்பு)

வரவு-செலவுத் திட்ட பற்றாக் குறையை நிவர்த்திப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் வெளிநாட்டு உதவிகளை நம்பியிருக்கவில்லை என சர்வதேச வர்த்தக மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனத்தின் முதலாவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் எமது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான அனுமதியையும், உற்பத்திப்பொருட்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க விலை மதிப்பை வழங்குவதனையுமே சர்வதேச சமூகத்திடமிருந்து தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய நாடு என பெருமையுடன் அழைக்கப்படும் இலங்கையை விடவும். ஏனைய நாடுகளில் எண்ணெய், மாணிக்கம், கடல் வளம், தங்கம் மற்றும் தொழில் நுட்ப வளங்கள் இருக்கின்ற போதிலும் அவற்றையும் விட பெறுமதி வாய்ந்த மனித வளம் இலங்கையில் இருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

## வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கு நோர்வே உதவி வழங்க வேண்டும்

### எரிக்சொல்ஹெய்மிடம் அமைச்சர் ராஜித கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு நோர்வே அரசாங்கம் உதவி வழங்க வேண்டும் என்று நிர்மாணம் மற்றும் பொறியியல் துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.



நோர்வேக்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றினை மேற்கொண்ட அமைச்சர் அந் நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே இக்கோரிக் கையினை விடுத்துள்ளார்.

நோர்வே நேரப்படி நேற்று முன் தினம் காலை 10 மணிமுதல் பி.ப12.30 மணி வரை நடைபெற்ற இச்சந்திப்பில் நோர்வேயின் வெளிநாட்டு விவகார அதிகாரி விரா ஹெல்ட்டொமும் கலந்து கொண்டார்.

இச் சந்திப்பின் போது, வடக்கு- கிழக்கின் அபிவிருத்திக்கு நோர்வே உதவி புரிய வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டார். இதுகுறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக எரிக்சொல் ஹெய்ம் உறுதியளித்துள்ளார்.

பத்துநாள் விஜயம்மேற்கொண்டு நோர்வே சென்றுள்ள அமைச்சர் ராஜித சேனாரட்ன, நோர்வேயிலுள்ள அரசியல் கட்சிகள் பலவற்றின் தலைவர்களையும் சந்தித்து பேசவுள்ளார்.

இலங்கையின் சமாதான முயற்சிக்கான அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து நோர்வே வெளியேறிய பின்னர் அங்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு அமைச்சர் ராஜித சேனாரட்ன சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-5)

## வடக்கு,கிழக்கில் இணக்க சபைகளை அமுல்படுத்துவதில் காலதாமதம்

### தர்மசிறி ஜெயவிக்ரம

(கொழும்பு)

உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தால் வடக்கு, கிழக்கில் இணக்க சபைகளை அமுல் படுத்துவதிலும் தாமதம் ஏற்பட்டிருப்பதாக இணக்க சபைகள் ஆணைக் குழுவின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான தர்மசிறி ஜெயவிக்ரம தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சு இணக்க சபைக்கான உறுப்பினர்கள் தொடர்பாக நீதியமைச்சின் பெறுபேறுக்காகக் காத்திருப்பதாகவும் ஏற்கனவே பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இணக்க சபைக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கு விரைவில் அவர்களுக்கான பயிற்சிகளை வழங்குமாறு நீதியமைச்சர் செயலாளரிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே ஒன்பது இணக்க சபைகள் செயற்பட்டு வருவதாகவும், வடக்கு, கிழக்கில் இணக்க சபைகளை அமைப்பதில் எந்த ஆட்சேபனையும்இல்லையென விடுதலைப் புலிகள் கூறியிருந்ததாகவும் இணக்க சபைகள் ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் நீதிபதியுமான தர்மசிறி ஜெயவிக்ரம பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார். (ஓ-5)

## மத்திய வங்கியின் சேவைகள் வெளிமாவட்டங்களுக்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)


இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டிருப்பதை அடுத்து பாரிய வளர்ச்சி எட்டப்பட்டிருப்பதாக இலங்கைமத்தியவங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் மத்திய வங்கியின் சேவைகள் வெளிமாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு அனுமதி பெற்ற 17 விசேட மத்தி வங்கிக் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டது.

இதில், 16 கிளைகள் மேல்மாகாணத்திற்கு வெளியே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த வருடத்தில் 66 வர்த்தக வங்கிக்கிளைகளும் ஆரம்பிக்கப்பட்டது.

இதில்49 கிளைகள் மேல்மாகாணத்திற்கு வெளியே நிர்வகிக்கப்பட்டன. அந்த வங்கிகள் 130 செயற்திட்ட அலுவலகங்களை ஆரம்பித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஓ-7)

## இரட்சகர் பகவான் பாபா



எல்லாம் வல்ல பகவான் சாயிக்கு அப்போது பத்தொன்பது வயது. பகவான் பல அற்புதங்கள் செய்கிறார் என கேள்வியுற்று அமரேந்திர குமாரும் அவருடைய தந்தையார் ராதாகிருஸ்ணனும் பகவானிடம் அடிக்கடி சென்றுவருவதுண்டு. இவர்களுடைய சொந்த இடம் புட்டபர்த்திக்கு மேற்கே அமைந்துள்ள பெனுகொண்டாவாகும். இக் காலத்தில் ராதாகிருஸ்ணனுக்கு தீராத நோய் பற்றிக் கொண்டது. பல இடங்களில் வைத்தியம் செய்தும் பலனில்லாது போய்விட்டது. இவரை பார்வையிட செல்பவர்கள் நீங்கள், பகவான் சாயியின் பாதங்களைத் தொட்டு வணங்குங்கள். உங்களின் நோய் முற்றாகத் தணிந்து விடும் என்றனர். ஆனால் ராதா கிருஸ்ணனுக்கோ வயது ஐம்பத்திரண்டு. பகவானோ சிறுவன் அவருடைய பாதங்களை நான் எவ்வாறு தொட்டு வணங்குவது என்று ஒரு கர்வம்.

இருந்தும் மகனின் வற்புறுத்தலின் பேரில் இருவருமாக புட்டபர்த்திக்கு சென்றனர் இவர்கள் செல்லும் வழி காடுநிறைந்ததாகும். காட்டின் நடு வழியிலேயே பகவான் யாரையோ வரவேற்கும் முகபாவனையுடன் நின்றிருந்தார். அப்போது ராதாகிருஸ்ணன் 'நீங்கள் இவ்வளவு தூரம் இங்கே...' என்றதும் சுவாமியும் 'எனது பிள்ளைகளைத் தேடித் தான் வந்திருக்கிறேன்.' என்னால் ஆச்சிரமத்தில் இருக்கமுடியவில்லை. உங்களைப் பார்க்கவே ஓடிவந்தேன். நீங்கள் எனது பாதத்தைத் தொட்டு வணங்குங்கள். நீங்கள் வந்த விடயம் சரிப்பட்டு விடும் என்றார்.

ஐயா, உங்கள் காலைத் தொட்டுத்தான் என் நோய் தீரவேண்டுமானால் அது அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். பரவாயில்லை என்றார் ராதாகிருஷ்ணன். சுவாமி கூறினார் நிச்சயம் நீங்கள் எனது பாதத்தைத் தொடப் போகிறீர்கள் என்னுடைய சீடனாக இருக்கப்போகிறீர்கள் எனக்கூறி புட்டபர்த்திக்கு அழைத்துச்சென்றார். அக் காலத்தில் புட்டபர்த்தியில் யாரும் தங்கியிருப்பதென்பது கஷ்டமாகவே இருக்கும். இருந்தும் தந்தையும் மகனுமாக இருபது நாட்கள் தொடர்ச்சியாக தங்கியிருந்தார்கள். இவர்களுக்கு சுவாமியின் தொடர் தரிசனம் கிடைக்கப்பெற்றது.

ஒருநாள் பகவான் அடியார்களுடன் அவர்களின் குறைகளை கேட்டு சம்பாஷித்துக் கொண்டிருந்தார். ராதாகிருஷ்ணனும் அங்கிருந்தார். இவரைப் பார்த்த சுவாமி இப்போதைக்கு பணியும் நோக்கம் உனக்கில்லை எனும் தோரணையில் முகத்தைத் திருப்பிக் கொண்டார். அடுத்த கணம் ராதாகிருஷ்ணன் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. பகவானின் கமலப் பாதங்களில் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து வணங்கினார். சுவாமி எழுந்திருக்கச் சொல்லி அவரை அணைத்து விபூதியை வரவழைத்து உண்ணவும் கொடுத்து உடல்பூராவும் தெளித்தும் விட்டார். ராதாகிருஷ்ணன் நோயற்ற மனிதனாக நோய் இருந்த அறிகுறி எதுவும் அற்று துள்ளி குதித்து பகவானை நினைத்து பாடலானார்.

ஜெய்சாயிராம்

– யாதவன்–

## பொறளையில் இளைஞன் சுட்டுக்கொலை

கொழும்பு பொறளையில் இளைஞன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட போது 8.32 மணியளவில் உயிரிழந்துள்ளார். சுட்டுக்கொல்லப்பட்டவர் 28 வயதுடைய ரவீந்திரகுமார என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-5)

## அம்பலாங்கொடையில் இருவர் சுட்டுக்கொலை

அம்பலாங்கொடையில் இனம் தெரியாத ஆயுத தாரிகளால் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். நேற்றுக்காலை சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த இருவர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட இருவரும் பாதாள உலகக் குழுவினர் என அம்பலாங்கொடைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குகள் பதிவில் உள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-5)

# பாதுகாப்புச் செலவீனத்தால் பணவீக்கம் அதிகரிப்பு!

## பிரதி நிதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு எதிர் நோக்கியிருக்கும் பெரும் சவாலான பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான பாதுகாப்புச் செலவீனங்களுக்கு 17 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை செலவிடுவதானது பணவீக்கத்தில் தாக்கம் செலுத்துகிறது என பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கி யிருக்கும் பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார். பயங்கரவாதத்தை தோற்கடிப்பதே நாடு எதிர் நோக்கியுள்ள பிரதான சவால் எனத் தெரிவிக்கும் அவர், சர்வதேச ரீதியில் அதிகரித்து வரும் எண்ணெய் விலைகள் குறித்தும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

நாடு எதிர் கொண்டிருக்கும் பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாகவும் பிராந்திய அடிப்படையில் அபிவிருத்தியை முன்னெடுப்பது அடுத்த சவாலாக உருவாகியுள்ளதாகவும் பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக அதிக தொகையினை செலவு செய்யவேண்டியிருப்பதால் தற்போதைக்கு தேவையானதுறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் இதன் காரணமாகவே அதிகரித்த பணவீக்கத்துக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் எண்ணெயின் விலை பீப்பா ஒன்றுக்கு 110 அமெரிக்க டொலர்களை விடவும் அதிகரித்திருப்பதானது, இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது. எப்படியிருப்பினும் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான அர்த்தமுள்ள செயற்பாடுகளை ஒவ்வொரு மட்டத்திலும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

யுத்த நிறுத்த காலப்பகுதியில் கிராம மட்ட அபிவிருத்திப் பணிகளும் அரச துறைகளுக்கான தேவைகளும் பிற்போடப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் மாத்திரமே அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கும் பிரதியமைச்சர், தமது அரசாங்கம் பயங்கரவாதத்தை எதிர்கொள்கின்ற அதே சமயம் அபிவிருத்திப் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும்குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## இலங்கையில் சர்வமத மாநாடு

சமயத் தலைவர்களின் மாநாடு ஒன்று எதிர்வரும் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இலங்கை, ஜப்பான், அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், கம்போடியா, பாகிஸ்தான், நோர்வே, சீனா மற்றும் தெற்காசிய நாடுகளை சேர்ந்த சர்வ மதத் தலைவர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.(ச-5)

## கிழக்குத்...

அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைத்து அமைச்சரவை மாற்றமொன்றை ஏற்படுத்த அரசு தீர்மானித்திருப்பதாக தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்ட அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் திட்டத்தை இலகுவில் முன்னெடுப்பதற்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் வெற்றியானது வழிவகுக்கும் என அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயக குழு உறுப்பினர்கள் தமது பிரதேசங்களில் அவர்களுக்கிருக்கும் ஆதரவை அதிகரித்துக் கொண்டு 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் அவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் சுதந்திரக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என அந்த அமைச்சர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக குழுவில் அங்கம் வகிக்காத மேலும் பலர் முன்னாள் அமைச்சர் அநுர பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரின் இழப்பின் ஏற்பட்ட வெற்றிடத்தில் இணைந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அந்த சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## அமைச்சர் அளுத்கமகே மீது வழக்குத் தாக்கல்

அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேயும் அவருடைய பாதுகாப்பு அதிகாரிகளும் தன்மீது தாக்குதல் நடத்தியதாக ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

40 வருடங்களுக்கு மேலாக இராணு சேவையில் இருந்து ஓய்வு பெற்ற மேஜர் தர அதிகாரியான அத்துல ரத்நாயக்க என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

சீரற்ற வீதியில் பயணித்துக் கொண்டிருந்த தன்னை முந்திச் செல்ல அமைச்சரின் வாகனத் தொடரணிக்கு அனுமதி வழங்க மறுத்தமைக்காகவே தான் தாக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## மேதின...

சுவட்டம் மற்றும் ஊர்வலத்தை இரத்துச் செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேதின நிகழ்வுகளுக்கு பதிலாக தமது கட்சி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மற்றும் கட்சிக்கும் நலம் வேண்டி அன்றைய தினம் களனி ரஜமஹா விகாரையில் சமய நிகழ்வுகளை நடத்துவதற்கும் அக்கட்சி ஏற்பாடு மேற்கொண்டுள்ளது. நாட்டில் தற்போது நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளை கருத்தில் கொண்டே இம்முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ச-5)

## பிரியங்காவைச் சந்தித்ததால்...

ஒரு கட்டத்தில் அடக்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுத்துள்ளராம் பிரியங்கா. பிரியங்காவின் பல கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் மௌனத்தையும் கண் கலங்களையும் பதிலாகத் தந்துள்ளார் நளினி.

தனது சந்திப்புக் குறித்துச் சகோதரர் பாக்கியநாதனிடம் உருக்கமாகக் கூறியுள்ளார் நளினி. இது குறித்து பாக்கியநாதன் கூறுகையில்,

தனது பாவங்கள் கழுவப்பட்டதாகக் கூறியுள்ளார். என்னைப் பிரியங்கா மன்னித்து விட்டதாக உணர்கின்றேன். வாழ்நாள் முழுவதும் அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தச் சந்திப்பின் மூலம் ராஜீவ் காந்தி குடும்பத்தின் மீது நான் வைத்திருந்த மரியாதை இப்போது மேலும் அதிகரித்துள்ளது என்றும் நளினி கூறியுள்ளார்.

இதேவேளை வேலூர் சிறையில் நளினியைச் சந்தித்தபோது பிரியங்கா கண்ணீர் விட்டு அழுதுள்ளார். இருவரும் சந்தித்துக் கொண்டபோது சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த நளினியை பிரியங்கா அன்புடன் அழைத்து தனது அருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

அந்த நேரத்தில் தனது தந்தையின் நினைவு வந்ததால் துக்கத்தை அடக்க முடியாமல் பிரியங்கா கண்ணீர் விட்டு அழுதார். உடனே அருகில் இருந்த நளினியும் அழுது விட்டார். பின்னர் பிரியங்கா தன்னைத் தேற்றிக் கொண்டு நளினியின் கையை ஆறுதலாகப் பற்றியபடி பேசத் தொடங்கினார்.

நீண்ட காலம் பிரிந்திருந்தவர்கள் சந்தித்துக் கொண்டதுபோல் உணர்வுபூர்வமாக அவர்களுடைய சந்திப்பு அமைந்திருந்தது என்றார். தனது தாயார் சோனியா காந்திக்கு நளினி அனுப்பிய கடிதங்களையும் தந்திகளையும் பிரியங்கா நினைவு கூர்ந்தார்.

உன்னைப் பார்க்கச் சொல்லி யாரும் என்னை அனுப்பவில்லை. சொந்த விருப்பத்தின் பேரிலே உன்னைப் பார்க்க வந்தேன் என்று நளினியிடம் பிரியங்கா கூறியுள்ளார். பாதுகாப்புக் கருதி இருவரும் எந்தப் பொருள்களையும் கொடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

பிரியங்கா எடுத்து வந்த தண்ணீரை மட்டும் இருவரும் குடித்துள்ளனர். பிரியங்காவின் சந்திப்புக் குறித்துச் சட்டத்தரணி துரைசாமி கூறுகையில்,

பிரியங்காவின் சந்திப்பு, அவர் கேட்ட கேள்விகளைப் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் இதைச் செய்திருப்பார்களா? என்ற சந்தேகத்தில் அவர் இருப்பதாகத் தெரிகின்றது. வேறு சில சக்திகள் விடுதலைப்புலிகளின் பெயரில் இதைச் செய்திருக்கலாமோ? என்று பிரியங்கா சந்தேகப்படுவதாகத் தெரிகின்றது என்றார். (ச-5)

## மதவாச்சி ஊடான போக்கு...

கெடுபிடிகளுக்குள் சிக்குண்டு போய் உள்ளனர்.

மதவாச்சி-மன்னார் வீதியில் கட்டையடம்பன் சோதனைச் சாவடியைக் கடந்து மன்னாருக்குள் நுழைவதற்கு ஏனைய பிரதேச மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

பாதுகாப்பு காரணங்களை கூறி நடமாடும் சுதந்திரத்தை, விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமையை பறிக்கின்ற இச்செயற்பாடானது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. படையினரால் மீறப்படும் மனித உரிமை மீறலுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இது விளங்குகின்றது.

முஸ்லிம், சிங்கள இனங்களிலிருந்து தமிழர்களை பிரித்தெடுத்து தனியான போக்குவரத்து நடைமுறைய்ய அமுல்படுத்துவது தமிழர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கும் கடத்துவதற்கும் இலேசான செயற்பாடாகும்.

இதனால் தமிழர்கள் அச்ச உணர்வுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். தென்பகுதிக்கு அவசர அவசிய தேவைகளின் நிமித்தம் பயணம் செய்வோர் தாம் சிறப்பாக அடையாளம் கண்டு தாக்கப்படலாம் என மறைமுகமாக பயமுறுத்தப்படுகின்றனர்.

எனவே தமிழர்களையும் இந்நாட்டின் குடிமக்கள் என நீங்கள் ஏற்றுக் கொண்டால் இந்த வகையான கெடுபிடிகளை உடன் தளர்த்தி பாதுகாப்பான பயணங்களுக்கு வழி சமைக்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்வதுடன் மனித உரிமை மீறல்கள் மூலம் இனப்பாகுபாட்டை தோற்றுவிக்க இடமளிக்க வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கிறேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## அரிசிக்குக் கட்டுப்பாடு...

இலங்கையில் அதிகரித்து வரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அரிசியை வியாபாரிகள் விற்கக் கூடிய அதிஉச்சபட்ச விலையை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி சம்பா அரிசி ஆகக் கூடிய விலை கிலோ ஒன்றுக்கு 70 ரூபாவாகவும் நாட்டரிசி 65 ரூபாவாகவும் சிவப்பு அரிசி 65 ரூபாவாகவும் வெள்ளைப் பச்சை அரிசி 55 ரூபாவாகவும் ஆகக் கூடுதலாக விற்பனை செய்ய முடியுமென்று வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

இந்த உத்தரவு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வருவதாகவும் அவர் அறிவித்துள்ளார். இதனை எவரும் மீறும் பட்சத்தில் நுகர்வோர் நீதிமன்றங்கள் மூலம் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-2)


## பெருமிதத்தோடு வாழ்த்துகின்றோம்

கொக்குவில் மத்தி கிழக்கு (ஜே/126)
கிராம அலுவலராகப் பணியாற்றிய

**திரு.குணபாலன் சாந்தமோகன்**

அவர்கள் பதவியுயர்வு பெற்றுள்ளமையை நாம் அக மகிழ்ந்து இவர் மேலும் பல உயர்வுகளைப் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்;
நா.நித்தியானந்தன்,
சி.ஜெயபாலசிங்கம்,சு.விஜயகுமார்.

(c-1032)




## தமிழ் குடும்...

கடத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த இமானுவல் அந்தோனிப்பிள்ளை (வயது-57), யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்த இறப்பியல் பேனாட் (வயது-47) ஆகியோரே கடத்தப்பட்டவர் கள் ஆவார்.

இவர்கள் இருவரும் கொட்டாஞ்சேனையில் தமது குடும்பத்தினருடன் வசித்து வந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் கடத்தப்பட்டமை குறித்துப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டபோது இதுவரை தமக்கு பலன் கிடைக்கவில்லை என இவர்களின் உறவினர்கள் மலையக மக்கள் முன்னணியின் அமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறையிட்டுள்ளனர். (ச-5)

## முகமாலையில்...

காணப்பட்ட விடுதலைப்புலிகளின் தொடர்பதுங்கு குழிகள் மற்றும் மோட்டார் குண்டுத் தாக்குதல் தளம் ஆகியவற்றின் மீது நேற்று அதிகாலை 6.15 மணிக்கு விமானப் படையின் எம்.ஐ. 24-ரக உலங்கு வானூர்திகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு ஒட்டி சுட்டான் பகுதியில் அமைந்திருந்த புலிகளின் அடையாளம் காணப்பட் 3 முகாம்களின் மீது நேற்று முன் தினம் நள்ளிரவு 11.50 மணியளவில் விமானப்படையின் யுத்த விமானங்கள் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இப்பிரதேசத்தில் புலிகளின் நடமாட்டங்கள் குறித்து உளவு விமானங்கள் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களை வைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் விமானப் படை பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ச)


## மோட்டார் சைக்கிள்கள் உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள

❖Hero Honda CD 100 SS ❖MD - 90

வகை மோட்டார் சைக்கிள்கள் உடன் தேவை.

தொடர்பு:- விளம்பர இல. -006

வலம்புரி

இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம். அல்லது,

021 222 3378, 021 222 7829


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.